
தங்கமயர் முனைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு

அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11,
தொலைபேசி 422839, 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி


ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6549 1990 மார்ச் 27 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238



இ தொ காவின் 50ஆவது மாநாடும், பொன் விழாவும் நேற்று முன்தினம் அட்டனில் நடைபெற்றன. முதல் படத்தில் இ தொ கா பொதுச் செயலாளர் திரு எம எஸ் செல்லச்சாமி, ஜனாதிபதி திரு ஆர் பிரேம தாச, இ தொ கா தலைவர் திரு எஸ் தொண்டமான், அமைச்சர் திரு காமினி திசாநாயக்க ஆகியோரைக் காண்கிறீர்கள்.

ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ், நிதிச் செயலாளர் திரு வி அண்ணாமலை, தலைவர் திரு எஸ் தொண்டமான், பொதுச் செயலாளர் திரு எம எஸ் செல்லச்சாமி ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை இரண்டாவது படத்தில் காணலாம.

மூன்றாவது படத்தில் வரவேற்புக் குழுத் தலைவி செல்வி செந்தமிழ்ச்செல்வியையும,

நான்காவது படத்தில் திரு தொண்டமான், அமைச்சர் விஜேரத்னவை கைலாகு கொடுத்து வரவேற்பதையும காணலாம. மத்தியில் இந்தியத் தூதுவர் திரு லால் மெஹ்றோத்ரா காணப்படுகிறார். (ண–ந)

[படங்கள்– றொட்ரிகோ]

மூன்றாம் வகுப்பிலிருந்து எல்லோருக்கும் ஆங்கிலம்

# தமிழ் மாணவருக்கு சிங்களம்

# சிங்கள மாணவருக்கு தமிழ்

## அரபாத் நேற்று புதுடில்லி போய் சேர்ந்தார்

கொழும்பு, மார்ச் 26

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் டாக்டர் யஸீர் அரபாத் மூன்று நாள் இந்திய விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதுடில்லி சென்றுள்ளார்–

சர்வதேச புரிந்துணர்வுக்கான 1988 ஆம் ஆண்டின் பண்டிட் ஜவஹலால் நேரு விருதை ஜனாப் அரபாத் பெற்றுக்கொள்

(2 ஆம பக்கம பார்க்க)

## 4 ஆம் வகுப்பிலிருந்து

அடுத்த வருடம் முதல் கற்பிக்கப்படும்

சோமண்ணை



சவூதி பேரீ. பழம்
கிழக்கில் இன்று
வழங்கப்படும்

## நோன்பு ஆரம்பம்

நிர்ணயிக்க இன்று மாநாடு

# 4 ஆம் வகுப்பிலிருந்து

## அடுத்த வருடம் முதல் கற்பிக்கப்படும்

## பாடத் திட்டத்தில் மாற்றம் பற்றி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

**அடுத்த ஆண்டிலிருந்து 5 ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்டம் மாற்றப் படுகிறது. அதன்படி 3 ஆம் வகுப்பிலிருந்து எல்லா மாணவர்களுக்கும் ஆங்கிலம் கற்பிக்கப்படும். 4 ஆம் வகுப்பிலிருந்து தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், சிங்கள மாணவர்களுக்கு தமிழும் கற்பிக்கப்படும்.**

இந்த தகவலை தேசிய கல்வி நிலையப் பணிப்பாளர் திருமதி ரி காரியவாசம நேற்றுத் தமது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்-

அவர் மேலும தகவல் தெரிவிக்கையில் கூறியதாவது—

இளைஞர்களின் அமைதியின்மை தொடர்பாக நியமிக்கப்பட்ட கமிஷனின் பரிந்துரைகளுக்கு ஏற்பவும ஐ தே கவின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கேற்பவும பாடத் திட்டம மாற்றி அமைக்கப்படும-

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஆசிரியர்களும பயிற்றுவிக்கப்படுவார்கள்-

அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 25 ஆயிரம ஆசிரியர்களுக்கு 272 நிலையங்களில் முதலில் பயிற்சி அளிக்கப்

(2ஆம பக்கம பார்க்க)

### சோமண்ணை



கோட்டையிலை இருக்கிற கச்சேரியிலை இனி கலகலப்புத் தான் பாருங்கோ.

## சவூதி பேரீச்சம்பழம் கிழக்கில் இன்று வழங்கப்படும்

கொழும்பு, மார்ச் 26

நோன்பு காலத்திற்காக சவூதி மன்னர் இலங்கை முஸ்லிமகளுக்கு அன்பளிப்புச் செய்த பேரீச்சமபழத்தை வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் இன்று அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று மாவட்டப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர்களிடம கைய

(2 ஆம பக்கம பார்க்க)

# நோன்பு ஆரம்பம் நிர்ணயிக்க இன்று மாநாடு

கொழும்பு, மார்ச் 26

ரமழான் நோன்பு ஆரமப திகதியை நிர்ணயிப்பதற்காக இன்று 27 ஆம திகதி மாலை 6-30 மணிக்கு கொழுமபு பெரிய பள்ளிவாசலில் ஒரு விசேட மாநாடு நடத்தப்படும-

கொழுமபிலும சுற்றுப்புறங்

(2 ஆம பக்கம பார்க்க)

## புதைக்கப்பட்ட ஆயுதங்கள் புலிகள் தேடி கண்டுபிடிப்பு

திருகோணமலை மார்ச் 26

திருகோணமலையில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும பணியில் விடுதலைப் புலிகள் இப்போது மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்-

மக்கள் இதற்குப் பெரும ஒத்துழைப்புத் தருவதாக திருகோணமலை விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன் தெரிவித்தார்- அவர் மேலும கூறியதாவது-

மாற்ற இயக்கத்தினர் கடைசி நேரத்தில் பல ஆயுதங்களைப் புதைத்து விட்டுச் சென்றுள்ளனர்-

இவற்றைக் கண்டுபிடிக்கும பணியில் நாங்கள் இறங்கியுள்ளோம- நகரில் பல இடங்களில் இவ்வாறு ஆயுதங்களைக்

(2 ஆம பக்கம பார்க்க)

திருமலை கச்சேரி

# தமிழ் ஊழியர்கள் நேற்று கடமைக்குத் திரும்பினர்

திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலை கச்சேரியைச் சேர்ந்த 54 தமிழ் ஊழியர்களும நேற்றுக் கடமைக்குத் திருமபினர். கடந்த 1 வருடம 11 மாதங்களாக இவர்கள் கடமைக்குச் செல்லாதிருந்தனர்.

திருகோணமலை கச்சேரி பிரட்ரிக் கோட்டையில் இயங்குகிறது. இங்கு ஒரு பகுதியில் இன்னும சிங்கள அகதிகள் இருந்து வருகின்றனர்.

இவர்களை இங்கிருந்து அகற்றும வரை தாங்கள் கடமைக்குத் திருமபப் போவதில்லை என தமிழ் ஊழியர்கள் கூறியிருந்தனர். எனினும விடுதலைப் புலிகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து இவர்கள் நேற்றுக் கடமைக்குத் திருமபினர்.

இவர்களை சிங்கள ஊழியர்கள் அன்புடன் வரவேற்றனர்-

அரச அதிபர் திரு கே பி விஜயகோன் இவர்கள் மத்தியில் பேசுமபோது கடந்த நிகழ்வுகளை மறந்துவிடுமபடி கேட்டுக் கொண்டார். அங்கு அவர் மேலும கூறியதாவது—

சிங்கள ஊழியர்களுடன்

(2 ஆம பக்கம பார்க்க)

வடக்கு கிழக்கில்

## ஆளுநரின் நிர்வாகமே வரி அறவிடலாம்

கொழுமபு, மார்ச் 26

மாகாண ஆளுநரின் கீழ் இயங்கும் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகம மட்டுமே அப் பகுதிகளில் வரி அறவிடலாம- விடுதலைப் புலிகளோ அல்லது வேறு இயக்கங்களோ அங்கு வரி அறவிட முடியாது-

மாகாண சபைகள் ராஜாங்க அமைச்சர் திரு ரூபா கருணாதிலக்க இப்படிக் கூறினார்-

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றும போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்-

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு

(2 ஆம பக்கம பார்க்க)

## 100 தமிழ் பொலீஸார் திருகோணமலை வந்தனர்

திருகோணமலை மார்ச் 29

திருகோணமலைக்கு 100க்கும அதிகமான தமிழ் பொலீஸார் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்-

இவர்கள் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்-

வடக்கு கிழக்கு பிரதி பொலீஸ் மா அதிபர் திரு ரி ஈ ஆனந்தராசா இதனைத் தெரிவித்தார்-

மேலும பல தமிழ் பேசும பொலீஸார் திருகோணமலைக்கு வரவிருக்கின்றனர் எனவும அவர் கூறினார்-

[ண—288]

## கடை திறக்கும் நேரம் ஏப்ரல் 14 வரை தளர்வு

கொழும்பு, மார்ச் 26

கடைகளைத் திறக்கும நேரம தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இன்று 27ஆம திகதி முதல் தளர்த்தப்பட்டிருக்கிறது.

சகல கடைகளும் காலை 10 மணிக்குப் பின்னரே திறக்கப் படல் வேண்டும. என தொழில்

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி.

# மாத்தளையில் இராணுவ கிராமம்

கொழும்பு, மார்ச் 26

மாத்தளை மாவட்டத்தில் "இராணுவ கிராமம்" ஒன்று அமைக்கப்படும்—

கடந்த காலங்களில் தீவிரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை குடியமர்த்துவதற்காகவே இக்கிராமம் அமைக்கப்படுகிறது—

பாதுகாப்பு பிரிவினரால் அமைக்கப்படும் முதலாவது கிராமம் இதுவாகும்—

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது—

வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன அண்மையில் மாத்தளை மாவட்டத்துக்கு விஜயம் செய்து இந்த இராணுவ கிராமம் அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்தார்—

தென்கடை மாத்தளை துங்புல்வேல வீதியிலுள்ள கொஹொலன்வெல என்ற இடத்தில் இந்த கிராமம் அமைக்கப்படவுள்ளது— சகல வசதிகளுடன் கூடிய 200 கிராமங்கள் இங்கு அமைக்கப்படும்— மின்சாரம், குடி தண்ணீர் சுகாதாரம், கல்வி விளையாட்டு போன்ற சகல வசதிகளும் கொண்ட கிராமமாக இதனை அமைப்பதற்கு மேற்படி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது—

(இ—வ)

## திருமலையில் வெடி பொருட்கள் கண்டுபிடிப்பு

திருகோணமலை, மார்ச் 25

திருகோணமலை உள் துறைமுக வீதியில் கடற்கரைப் பிரதேசத்தில் 16 பொலீத்தீன் பைகளில் வெடிப் பொருட்கள் கிடக்கக் காணப்பட்டன— இவற்றை பொலீஸார் கண்டுபிடித்தனர்—

சுமார் 450 கிலோ எடையுள்ள இந்த வெடிப் பொருட்கள் இலங்கை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது—

(இ—அஜ)

### சிறுபான்மையினரின் கோரிக்கைக்கு செவிமடுக்காவிடின்

# வெளிநாட்டு தலையீடுகளை எதிர்நோக்க வேண்டி வரும்

— ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 26

எமது நாட்டு சிறுபான்மை மக்களின் சாதாரண கோரிக்கைகளுக்கு நாம செவிமடுக்க வேண்டும்— இல்லாவிட்டால் அந்நிய நாட்டின் தலையீடுகளை நாம எதிர்நோக்க வேண்டி வரும்—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு கூறினார்—

கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டாரகமவில் [illegible] வம ஒன்றில் உரையாற்றும போதே அவர மேயகலை—வ று கூறினார்—

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி மேலும கூறியதாவது—

பிரச்சினைகளை எதிர்நோக்க எமமிடம ஆயுத பலம இல்லாவிட்டாலும ஆத்ம பலம இருக்கிறது—

தேர்தல் வாக்குறுதிகளை நான் படிப்படியாக நிறைவேற்றி வருகிறேன்— மார்ச் மாதம 31 ஆம திகதிக்குள் இந்தியப் படை இங்கிருந்து வெளியேறாவிட்டால் இந்தியாவில் நடைபெறும எந்தவொரு மாநாட்டிலும கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்திருந்தேன்—

ஆனால் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னதாகவே இந்தியப் படையினர் எமது மண்ணில் இருந்து வெளியேறி விட்டனர்—

இதே அடிப்படையிலேயே இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவை யம மூடி விடத் தீர்மானித்துள்ளேன்—

இஸ்ரவேலியர்கள் பலஸ்தீனியர்களுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை கைவிட்டால் இஸ்ரவேலிய அரசுடன் மீண்டும தூதரக தொடர்புகளை ஏற்படுத்த நான் தயாராகவே இருக்கிறேன்—

முற்பிறவியில் நான் எந்த இனத்தில் எந்தக் குடும்பத்தில் பிறந்தேன் என்பதை அறியேன்— இப்பிறவியிலும பிறந்து ஓரளவு வளர்ந்ததன் பின்னரே நான் ஓர் சிங்கள குடும்பத்தில் பிறந்துள்ளதாக அறிகிறேன்—

கடந்த வாரம "ரிவிரஸ" பத்திரிகையில் வெளியான கடிதத்தை அனைவரும தவறாது வாசிக்க வேண்டும—

முற்பிறவியில் தமிழ்க் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஓர் குழந்தை இப்பிறவியில் முஸ்லிம குடும்பத்தில் பிறந்துள்ளது— மூன்றரை வயதான அந்தக் குழந்தை தனது முற்பிறவி குறித்து நினைவு கூர்ந்துள்ளது—


இவற்றை நாம யதார்த்த ரீதியில் நோக்க வேண்டும—

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்—

விவசாய உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியும இங்கு உரையாற்றினார்—

[இ—ர]





## ஜனாதிபதி வழக்கறிஞர்கள்

ஜனாதிபதி வழக்கறிஞர்களாக நியமனம பெற்றுள்ள திரு டெஸ்மன்ட் பெர்னாண்டோ, திரு நேரு குணதிலக்க, திரு பேர்ஸி வெலண்டயின், திரு டி எஸ் விஜேசிங்க, திரு மோதிலால் நேரு, திரு நளின் அபேசேகர, திரு காமினி சேனஹித் மாரப்பன, திரு கோசல விஜேதிலக்க, ஜனாப் எம எல் எம அமீன் ஆகிய 9 பேரும நேற்றுக்காலை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பதவிப் பிரமாணம செய்து கொண்டனர்—

இவர்கள் பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம செய்து கொள்வதற்கு முன் எடுக்கப்பட்ட படம—

(படம— ஹென்றி ரொட்ரிகோ) [இ*த]

## இ. காங்கிரஸ் முதலமைச்சர்கள் ராஜினாமா

புதுடில்லி, மார்ச் 26

இந்தியாவின் தெற்கு மாநிலமான கோவா மற்றும வடகிழக்கு மாநிலமான மெகாலயா ஆகியவற்றின் முதலமைச்சர்கள் நேற்று திங்கட்கிழமை பதவியை ராஜினாமாச் செய்தார்கள்.

எதிர்க்கட்சிகள் புதிய அரசாங்கமொன்றை அமைக்க பாதை அமைக்கும விதத்திலேயே இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த இவர்கள் ராஜினாமாச் செய்திருக்கின்றனர்.

இந்திய ஏஜன்ஸி செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

(எ)

## தமிழ் ஊழியர்..

# முஸ்லிம்களுக்கு பிறை பார்க்க

## வலியுறுத்தி அறிக்கை

கொழும்பு, மார்ச் 26

சகல முஸ்லிமகளும குறிப்பாக உலமாக்கள், கதீப்மார்கள், பள்ளி வாசல்களின் நமபிக்கைப் பொறுப்பாளர்களும பிறை பார்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும—

அகில இலங்கை ஜமஇய்யத்துல் உலமாச் சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம ஜே எம றியாழ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கேட்டுள்ளார்—

ரமழான் முதலாம நாளைப் பற்றியும, பிறை பார்ப்பது பற்றியும முஸ்லிமகளுக்கு விளக்குவதற்காக உலமாச் சபை இந்த அறிக்கையை விடுத்துள்ளது—

## சவூதி பேரீ..

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ளிப்பார்—

பள்ளிவாசல்களில் [illegible]

## ஆளுநரின்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அலுவல்கள் அமைச்சர் திரு யூ பி விஜேகோன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது—

திரு விஜேகோன் கூறியதாவது—

மாகாண சபைகள் வரி அறவிடுவது தொடர்பாகவும அந்தப் பணத்தை செலவிடுவது தொடர்பாகவும நாம மாகாண சபைகளுக்கு மாதிரி நிதிச் சாசனம ஒன்றை வழங்கியுள்ளோம—

இதன் அடிப்படையில் மாகாண சபைகள் அவற்றின் நிதிக் கொள்கைத் திட்டங்களை வகுத்துக் கொண்டு செயற்படலாம—

மேல் மாகாண சபை மட் [illegible]

இந்த விடயத்தில் எதனை எப்போது செய்ய வேண்டும என்பதை ஜனாதிபதி தீர்மானிப்பார்— மாகாண சபைகளுக்கு தற்போது குறைவின்றி அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன—

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு நீல் பெர்ணான்டோ மற்றும மாகாண சபைகள் ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு ஆர் அபேரத்ன ஆகியோரும மாநாட்டில் கலந்து கொண்டனர்—

குறிப்பு—

ஜனாதிபதி திரு ஆர் பிரேம [illegible]

# எயிட்ஸ் கர்ப்பிணியை பராமரித்த தாதிமாருக்கு பதவி உயர்வு கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 26

எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணை பராமரித்த தாதிமார், மற்றும சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும—

சுகாதார அதிகாரிகள் இது பற்றி தற்போது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்—

அண்மையில் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட எயிட்ஸ் நோயாளியைப் பராமரிக்க தாதிமார் பலர் மறுத்து விட்டனர்—

என்னும ஒரு சில தாதிமாரும சிற்றூழியர்களும மாத்திரமே இவரைப் பராமரிக்க முன் வந்தனர்— இவர்களுக்கே விசேஷ பதவி உயர்வு வழங்கப்படவிருக்கிறது— கர்ப்பிணிப் பெண் இன்று அல்லது நாளை குழந்தையை பிரசவிக்கக் கூடுமென டாக்டர்கள் தெரிவித்தனர்—

[ண—ர].

இன்றைய திரைகளில்

9 வது வாரம

கெப்பிட்டல்

## தமிழ் ஊழியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து ஒரு சீராக, குழு அடிப்படையில் கடமைகளில் ஈடுபட வேண்டும்.

மூன்று வருட கால அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்யும் வகையில் தீவிரமாக பாடுபட வேண்டும். கடந்த கால பாக்கி வேலைகளையும் விரைவாக முடிக்க முயல வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார்.

நேற்று தமிழ் ஊழியர்கள் கடமைக்குத் திரும்பிய போது எவ்வித சோதனைகளும் இடம் பெறவில்லை.

(ண-ந-288)


## தினபதி சிறு விளம்பரம்

### மௌலவி தேவை

ஐந்து நேரத் தொழுகை நடாத்தவும் குர்ஆன் ஓதிக் கொடுக்கவும் தகுதி வாய்ந்த மௌலவி உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். எ எச் எ வாஹித், மஸ்ஜிதுல் அஸ்ஹர் கலஹாகும்புர, தெஹியங்கை, மாத்தளை.

031717

### தேவை

"கோட்சூ" - லேடீஸ் ஜென்ஸ் தோல் செருப்பு தையலில் தேர்ச்சி பெற்றவர்கள் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். எம் எம் எம் ரயீசுத்தீன், 42/19 சென் செபஸ்தியன் வீதி, குணசிங்கபுரம், கொழும்பு-12.

030353


ளிப்பார்.

பள்ளிவாசல்களில் அமைதி, சமாதானம் வேண்டி விசேஷ துஆ பிரார்த்தனைகள் நடைபெறும். அவற்றில் அமைச்சர் கலந்து கொள்வார்.

[உ—கு]

## தமிழ் மாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

பயிற்சிக் காலம் 4 வருடங்கள்.

மூன்று வருடங்கள் முடிந்ததும் அவர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பாடசாலைக்குப் போக வேண்டிய வயது வந்த எமது சிறார்கள் 87 சதவீதமானோர் பாடசாலைக்குப் போகிறார்கள்.

புதிய பாடத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் நாட்டின் நல்ல பிரஜைகளாக உருவாக்கப்படுவதோடு சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு வேண்டிய அடிப்படைப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

புதிய பாடத் திட்டத்தின்படி மூன்றாம் வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் ஆங்கிலம் போதிக்கப்படும்.

4ஆம் வகுப்பில் சிங்கள மாணவர்களுக்கு தமிழும் தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும் போதிக்கப்படும்.

6ஆம் வகுப்பில் அவர்களின் எழுத்தாற்றல் பயிற்சியை அறிய பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

அதன் பின்னர் தொடர்ந்தும் தமிழ், சிங்களம் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் இன வித்தியாசம் இன்றி சகல மாணவர்களுக்கும் போதிக்கப்படும்.

ஜீ சி ஈ உயர்தர மாணவர்களுக்கு கம்பியூட்டர் மற்றும் விஞ்ஞானக் கல்வி போதிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

[உ—கு]

யுடன் முஸ்லிம்களுக்கு விளக்குவதற்காக உலமாச் சபை இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

அறிக்கையில் மௌலவி [illegible] தொடர்ந்து குறிப்பிட்டிருப்பதாவது:

இஸ்லாமிய வருடம் என்று கூறப்படும் சந்திர வருடம் சில மாதங்கள் 29 நாட்களையும், சில மாதங்கள் 30 நாட்களையும் கொண்டது.

குறிப்பாக இன்ன மாதம் 29 இல் முடியும்; இன்ன மாதம் 30 இல் முடியும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது.

எனவே ஒவ்வொரு சந்திர மாதமும் 29 ஆம் நாள் சூரிய அஸ்தமனத்தின் பின்பு பிறை பார்த்தே அடுத்த மாதத்தின் முதல் நாளைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு பிறையைக் கண்ணால் பார்ப்பதன் மூலமே இஸ்லாமிய மாதங்களின் தலைப்பிறையை நிர்ணயிக்க வேண்டும் என்பது பெரும்பாலான இமாம்களின் முடிவு.

எனவே, இந்த விதிகளுக்கமைய, இவ்வருட ரமழான் மாதத்தின் ஆரம்ப நாளைப் பற்றித் தீர்மானிப்பதற்காக மொமாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சூரிய அஸ்தமனத்தின் பின்பு பிறை பார்க்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 29 ஆம் நாளன்று பிறை பார்ப்பது "பர்ளு கிபாயா" எனும் பொதுக் கடமையாகும்.

ஆகையால், சகல முஸ்லிம்களும் விசேடமாக உலமாக்கள், நம்பிக்கையாளர்கள் பள்ளிவாசல்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பிறை பார்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பிறை கண்டவர்கள் உடனடியாக கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கம் (432110) மூலமோ அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

(இ-007)

லாம்.

மேல் மாகாண சபை மட்டுமே இதுவரை அவ்வாறான கொள்கைத் திட்டத்தை வகுத்துக் கொண்டுள்ளது.

இதற்குப் புறம்பாக மாகாண திட்டமிடல் பிரிவுகள் அமைக்கப்படும். அந்தப் பிரிவுகள் மத்திய அரசின் கொள்கை திட்டமிடல் அமைச்சுடன் தொடர்பு கொண்டு வண்ணம் தமது திட்டங்களை வகுத்துக் கொள்ளும்.

கேள்வி:— வடக்கு - கிழக்கு பகுதிகளில் இவற்றைச் செய்வதற்கான அரசியல் தலைமைத்துவம் அங்கு இப்போது இல்லை. நிர்வாக ரீதியிலாவது ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா?

திரு விஜேகோன்— மாகாண நிர்வாகம் ஆளுநரின் கீழ் இயங்குகிறது. ஆளுநர் நேரடியாக அதிகாரிகளைக் கொண்டு இந்தப் பணிகளை மேற்கொள்ளலாம்.

கேள்வி— வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் நாட்டை விட்டு வெளியேறும் முன்னரே வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைத்து விடுவது தொடர்பாக பல்வேறு பேச்சுக்கள் அடிபட்டன. அரசாங்கத்திற்கு அப்படி ஒரு தேவை இருந்ததா?

திரு ரூபா கருணாதிலக்க—

## மத்திய மா. சபை உறுப்பினருக்கான கருத்தரங்கு

கண்டி, மார்ச் 25

மத்திய மாகாண சபையின் இம்மாதத் தொடர் கூட்டம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறும்.

திரு [illegible] சமரசிங்க கூட்டத்துக்குத் தலைமை தாங்குவார்.

(இ-017)

வோ.

குறிப்பு—

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நேற்று முன்தினம் அதிகாரம் அளித்ததை அடுத்து வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தை அம் மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன நடத்துகிறார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி அரசமைப்புச் சட்டத்தின் 154 ரி ஷரத்தின் கீழ் மாகாண சபை நிர்வாகம் தடையின்றி நடைபெறுவதற்கு வேண்டிய நிர்வாக நடவடிக்கைகளுக்கான உத்தரவைப் பிறப்பித்தாரே தவிர, மாகாண சபை நிர்வாகத்தை முற்றாகப் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[ண—ற]

## புதைக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்துள்ளோம்.

மக்கள் எங்களுக்குப் போதிய ஆதரவு தருகின்றனர். மக்களின் நன்மை கருதியே இவ்வாறு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

இப்படி திரு ரூபன் மேலும் தெரிவித்தார்.

[ண—288]

## அரபாத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

மூன்று நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் யஸீர் அரபாத்தை சந்தித்து பேசுவதற்காக இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது நேற்று புதுடில்லி பயணமானார்.

ஜனாப் யஸீர் அரபாத்தை இலங்கை வருமாறு சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது அழைப்பு விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ண-கு)

னர். இவர்களுக்கு விசேஷ பதவி உயர்வு வழங்கப்படவிருக்கிறது.

இதேவேளை மேற்படி கர்ப்

## கடை திறக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு தடை விதித்திருக்கிறது அல்லவா!

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இந்த தடையுத்தரவு தளர்த்தப்பட்டிருக்கிறது.

இதன்படி இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை கடைகளை எந்த நேரத்திலும் திறந்து எந்த நேரத்திலும் மூடலாம்.

தொழில் ஆணையாளர் திரு ஜீ வீரக்கோன் இதனைத் தெரிவித்தார்.

புத்தாண்டைக் கொண்டாடும் மக்களின் நன்மை கருதியே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என அவர் கூறினார்.

இதுகுறித்து அந்தந்தப் பகுதி தொழில் உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(ண-ர)

## நோன்பு ஆர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இம் உள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்களின் கதீப்மார்கள், உலமாக்கள், தர்மகர்த்தாக்கள், உலமா சபையின் "பிறை" குழு உறுப்பினர்கள் ஆகியோர் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றுவர்.

ரமழான் தலைப்பிறையைக் காண்பவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு அறிவிக்குமாறும் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

முஸ்லிம்கள் தொலைபேசி இலக்கம் 432110 உடன் தொடர்பு கொண்டு இது பற்றி பெரிய பள்ளிவாசலுக்கு அறிவிக்கலாம்.

[ண—007]


9 வது வாரம்

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-30 6-00, 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00 6-00

நியூசிகிரி
(கட்டுகஸ்தொட்டை)
10-30, 2-3.. 6-15

பிரபு - அமலா
சிறாவன் மீனுராஜ் நடித்த

**பூ... பூவா பூத்திருக்கு**

(கலர்)

15 வது வாரம்

ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30 6-00

மிட்லண்ட்
(நாவலப்பிட்டிய)
2-00, 6-00

ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா நதியா
நடித்த

**ராஜாதி ராஜா**

(கலர்)

16 வது வாரம்

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30 2-30 6 30

கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த

**வருஷம் 16**

(கலர்)

# எம். ஜி. ஆர். போர்வை

## தந்ததை நினைக்க உடல் புல்லரிக்கிறது

## பௌர்ணமியாக ஜொலிக்கும் பபிதா



பௌர்ணமி

எம ஜி ஆர் முதல் கமல ஹாசன் வரை முன்னணி நடிகர்களுடன் குழந்தையாக — சிறுமியாக நடித்து சாதனை புரிந்த நான், இன்று குமரி ஆகி மீண்டும திரை உலகில் சாதனை புரிவேன் என்கிறார் நடிகை பௌர்ணமி.

"பபிதா என்பததான் என்னுடைய உண்மையான பெயர். ராசியான பெயருமகூட. நான் குழந்தையாக இருந்த போது அந்தப் பெயரில்தான் 80 படஙகள் வரை நடித்து இருக்கிறேன்.

பெரிய பெண் ஆனதும அதே மாதிரி பல படஙகளில் நடித்து "சூப்பரா" வரலாம என்று நினைத்தால், என் பெயரில் கவர்ச்சி நடனம ஆடும நடிகை (பபிதா) வந்து விட்டார்.

கவர்ச்சி நடனத்தில் அவர் புகழ் பெற — "பபிதா" என்றால் எல்லோருமே அவரைத்தான் நினைக்கிறார்களே தவிர, 80 படஙகளில் நடித்த என்னை மறந்து விடுகிறார்கள்.

திரை உலகின் ஒரு பெயரில், ஒரே நேரத்தில் ஒருவர்தான் இருக்க முடியும.

எனவே என் பெயரை "பௌர்ணமி" என்று மாற்றி வைத்துக் கொண்டு, ஏதோ புதுமுகம மாதிரி நடிக்கச் செல்ல வேண்டி இருக்கிறத.

நான் ஒன்றும இப்போத உள்ள நடிகைகள் போல் "திடீர்" கதாநாயகி ஆனவள்

டிங"கை இரவு 9 மணி வரை நீடித்து விட்டார்கள்.

அங்கு கடும குளிர் இருக்கும. என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. குளிரில் நடுஙகியபடி வெடவெடத்துப் போய் உட்கார்ந்து இருந்தேன்.

தற்செயலாக என்னைப் பார்த்த எம ஜி ஆர் என் பெற்றோரிடம "ஏன் போர்வை கொண்டு வரவில்லையா?" என்று கேட்டார். "5 மணியுடன் முடிந்து விடும" என நினைத்து போர்வை கொண்டு வரவில்லை. என்று என் பெற்றோர்கள் கூறினார்கள்.

உடனே எம ஜி ஆர் தனது காரில் இருந்த அவரது சால்வையை எடுத்துவரச் சொல்லி எனக்குப் போர்த்தி விட்டுச் சென்றார்.

அப்போது "நான் போனதும என் டிரைவர் வந்து சால்வையைக் கேட்பார். கேட்டாலும கொடுக்கக் கூடாது" என்று கூறி விட்டுச் சென்றார். அவர் சொன்ன மாதிரியே, சற்று நேரத்தில் டிரைவர் வந்து, "இது ஐயாவுடைய (எம ஜி ஆர்) சால்வை. இந்த ஒரு சால்வை தான் கொண்டு வந்தார். அதையும கொடுத்து விட்டார். அவருக்கு குளிரும. சால்வையை



எம ஜி ஆர்

கொடுஙகள்" என்று கேட்டார். உடனே நானும, என் பெற்றோரும எம ஜி ஆர் கூறிச் சென்றதைக் கூறினோம. அவர் திரும்பிச் சென்று விட்டார்.

என் மனதை விட்டு நீஙகாத அந்த சமபவத்தை நினைக்கும போதும, சொல்லும போதும என் உடல் புல்லரிக்கிறது.

அதன் பிறகு கூட எத்தனையோ நடிகர்களுடன் நடித்து இருக்கிறேன்— படப்பிடிப்பில் எவ்வளவோ கஷ்டப்பட்டும இருக்கிறேன்.

ஆனால் உதவுவதில் எம ஜி ஆருக்கு நிகர் யாரும இல்லை—

(இ–10)



வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களின்

# மறுசீரமைப்பு பணி:

# 68½ கோடி ருபா

# செலவிட திட்டம்

கொழும்பு, மார்ச் 26

வடக்கு — கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணஙகளின் மறுவாழ்வு, மறுசீரமைப்பு பணிகளுக்காக 68½ கோடி ருபா செலவிட தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதனை மறுவாழ்வு மறுசீரமைப்பு ராஜாஙக அமைச்சர் திரு கே வின்சன்ட் பெரேரா தெரிவிதார்.

அவர் இதுபற்றி மேலும தெரிவித்ததாவது—

சீர்குலைவு, தீவிரவாத நடவடிக்கைகளால் சேதமுற்ற அரச, தனியார்துறை சொத்துக்களை மறுசீரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்குரிய விவரஙகள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை.

இதனால் மறுசீரமைப்பு, மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

வடக்கு — கிழக்கு பகுதிகளை தவிர்ந்த ஏனைய மாகாணஙகளின் விவரஙகள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை.

சேதஙகள் தொடர்பான விவரஙகளை அனுப்புமாறு அரசு ஏற்கனவே உத்தரவிட்டு இருந்தது.

அரச அதிபர்களும, அதிகாரிகளும இதனை உரிய காலத்தில் அனுப்பாததால் இப்பணிகள் தடைப்படுகின்றன.

சகல விவரஙகளும கிடைத்தபின் முழு அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும.

இவ்வாறு அமைச்சர் கூறினார்—

(இ–007)



தேசிய தலைவர் அல்ஹாஜ் ரி பி ஜாயாவின் நினைவு தினம அண்மையில் அக்கரைப்பற்று முஸ்லிம மத்திய கல்லூரியில் கொண்டாடப்பட்டது- இஙகு முஸ்லிம திணைக்கள உத்தியோகத்தர் ஜனாப் வஹ்பீபுல்லா உரையாற்றிக் கொண்டிருப்பதை படத்தில் காண்க-

(இ–035)

# கிளிநொச்சி

# கிராம வீதிகள்

# திருத்தியமைப்பு

வவுனியா, மார்ச் 25

அமெரிக்க யூ எஸ் நிதி நிறுவனத்தின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராம வீதிகள், நீர்ப்பாசன மதகுகள் என்பன தற்பொழுது திருத்தப்பட்டு வருகின்றன.

சுமார் இருபது லட்சம ருபா செலவில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கத்தின் மேற்பார்வையில், இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

றொட்ரிக்கோ வீதி, றேஸ் வீதி, யூனியன் குளம வாய்கால், பரவிப்பாஞ்சான் பிரதான பாலம, கிளிநொச்சிக் குளம, பிரதான பாலம, தண்ணீர் திறந்து விடும துரிசு என்பனவே தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் திருத்தப்படுகின்றன.

இவை கடந்த பத்து வருடஙகளாகத் திருத்தப்படாமல் மிகவும சேதமடைந்த நிலையிலுள்ளன என்பது இஙகு குறிப்பிடத்தக்கது.

(இ–101)

# பரீட்சையில் சிக்கி

# புத்தளத்திலிருந்து

# அறுலக்காட்டுக்கு

# புதிய ரயில் சேவை

புத்தளம, மார்ச் 25

புத்தளத்தில் இருந்து சுமார் 30 மைல் தூரமுள்ள "அறுலக்காடு என்னும இடத்திற்கு புதிய பிரயாணி

தான் எடுக்கப்படுகின்றன.

பல நூற்றுக்கணக்கான குடுமபஙகள் இஙகு வசித்து வருகின்றனர்.

புத்தளத்திலிருந்து புறப்படும

உள்ள நடிகைகள் போல் "திடீர்" கதாநாயகி ஆனவள் அல்ல– பிறந்த 28ஆவத நாளி லேயே நடிக்க வந்து விட்டவள் நான்.

"குழந்தை நட்சத்திரமாக" கொடிகட்டிப் பறந்தவள் நான். மறைந்த முதல் – அமைச்சர் எம ஜி ஆர் சினிமாவில் நடித்துக் கொண்டு இருந்த போது, அவரு டன் பல படங்களில் குழந்தை யாக, சிறுமியாக நடித்து இருக்கி றேன்.

"நல்ல நேரம" படத்தில் எம ஜி ஆர் — கே ஆர் விஜயா வின் குழந்தையாக — யானை காப்பாற்றும குழந்தையாக நடித்தவள் நானே. "பல்லாண்டு வாழ்க" படத்திலும எம ஜி ஆரு டன் சிறுமியாக நடித்தேன்.

அப்போது நான் சிறுமிதான். என்றாலும எம ஜி ஆர் என்னி டம காட்டிய அன்பு என் மனதில் இன்னமும பசுமரத்து ஆணி போல் பதிந்து இருக்கிறது.

"பல்லாண்டு வாழ்க" படப் பிடிப்பு பெங்களூர் அருகே உள்ள கலசபுரத்தில் நடந்தது. காலையில் ஆரமபித்து மாலை 5 மணி வரை "சூட்டிங்" நடை பெறும.

திடீரென்று ஒரு நாள் "சூட்

தினபதி சினிமா



ஆசையில் தவிக்குது மனசு, ஆரமபிக்க சொல்லுது வயசு. இளசுக்கு இது வந்தது புதுசு, அதனால் தயங்கித் தயங்கி காட்டுதோ மவுசு.

(இளவரசன் – ஜே லலிதா) (படம– வரவு நல்ல உறவு)

(இ–10)

# யார் போட்ட முடிச்சில் நிஷாந்தி

சிவகாமசுந்தரி பிலிமஸ் தயாரிக்கும படம, "யார் போட்ட முடிச்சு"

இதில் ராமகி கதாநாயக னாக நடிக்க, அவருக்கு ஜோடி யாக நிஷாந்தி நடிக்கிறார்.

ஜனகராஜ், "நிழல்கள்" ரவி, ராதாரவி, செந்தாமரை "வெண்ணிற ஆடை" மூர்த்தி, சுபா, ரேணுகா, மனோரமா ஆகியோரும நடிக்கிறார்கள்.

எஸ் ஏ ராஜ்குமார் பாடல்கள் எழுதி, இசை அமைக்கிறார்.

ராமச்சந்திரபாபு ஒளிப்பதிவு செய்கிறார்.

பேராசிரியர் நா பாண்டு ரஙகன் கதை – வசனம எழுத, திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார் எம ஜெயகுமார்.

மிகுந்த பொருட் செலவில் உருவாகும இந்தப் படத்தை பி ராதாகிருஷ்ணன் தயாரிக்கி றார்.

இந்தப் படத்துக்காக ராமகி – நிஷாந்தி கலந்து கொண்ட இரண்டு பாடல் காட்சிகள் சுமார் மூன்று லட்சம ரூபா செலவில் ஊட்டியில் படமாக்கப் பட்டன.



நிஷாந்தி

தொடர்ந்து 15 நாட்கள் படப்பிடிப்பு நடந்தது.

ராதாரவி – ரேணுகா சமபந் தப்பட்ட கவர்ச்சியான பாடல் காட்சி ஒன்றும படமானது.

இத்துடன் படப்பிடிப்பு முடி வடைந்தது. படம விரைவில் திரைக்கு வருகிறது.

(இ–10)

# பரீட்சையில் சித்தி பெறாததால்

## இரு யுவதிகள் தற்கொலை

வவுனியா, மார்ச் 25

க பொ த உயர்தரப் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் இரு இளம பெண்கள் நச்சு விதை உட் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்கள்.

இறந்தவர்கள் இருவரும வெவ்வேறு இடஙகளைச் சேர்ந்த வர்கள் என்று யாழ் வைத்திய சாலை பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

சசிகலா பத்மநாதன் (வயது 20) என்ற பளையைச் சேர்ந்தவ ரும, திருஞானம ஜெயந்தி என்ற (வயது 20) அளவெட்டியைச் சேர்ந்தவருமே தற்கொலை செய்து கொண்டவர்களாவர்.

பரீட்சை முடிவுகள் வெளியான தன் பின் இருவரும மனம குழம பிய நிலையில் காணப்பட்டனர் என்ற மரண விசாரணை அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மரண விசாரணையின் பின் இவர்கள் இருவரது சடலஙகளும உரியவர்களிடம ஒப்படைக்கப் பட்டது என்றும அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, இம மாதம மட்டும ஐந்துக்கும அதிகமானவர்கள் நச்சு விதை உட்கொண்டு தற்கொலை செய்துள்ளனர் என்ற அறிக்கை யொன்று தெரிவிக்கிறது.

(இ–101)

அறலக்காடு என்னும் இடத்திற்கு புதிய பிரயாணி கள் ரயில் சேவையொன்று ஆரமபித்து வைக்கப்பட்டுள் ளது.

நடமாடும ஜனாதிபதி செயலக சேவைத் திட்டத்தின் இரண்டாம நாள் தினத்தன்று இச்சேவையை போக்குவரத்து அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் ஆரமபித்து வைத் தார்.

புத்தளம சிமெந்து தொழிற் சாலைக்குத் தேவையான மூலப் பொருட்கள் அறலக்காடு என்ற இடத்தில் தோண்டித்தான் கின்றனர்.

புத்தளத்திலிருந்து புறப்படும மேற்படி ரயில் வட்டக்கண்டல், கரடிப்பூவல், வண்ணாத்தி வில்லு, இலவஙகுளம ஆகிய கிராமஙகளில் தரித்துச் செல் லும.

(இ–241)

வடமராட்சி கிழக்கு பகுதியில் ......

# கிராம சேவை பிரிவுகள் அதிகரிப்பு

பளை, மார்ச் 25

வடமராட்சி கிழக்கு உதவி அரசாஙக அதிபர் பிரிவில், கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 18ஆக அதிகரிக்கப்பட்டுள் ளது.

முன்னர் அப்பகுதியில் 11 கிராம சேவையாளர் பிரிவு கள் இருந்தன.

தற்போது 7 புதிய கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக் கப்பட்டுள்ளன.

ஆழியவளை, வெற்றிலைக் கேணி, வத்திராயன், செமபியன் பற்று தெற்கு, நாகர்கோவில் கிழக்கு, பொற்பதி, மணல்காடு ஆகியனவே புதிதாக உருவாக்கப் பட்டுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் ஆகும.

கடந்த 15ஆம திகதி தொடக்கம புதிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு கிராம சேவையாளர்கள் நியமிக் கப்பட்டுள்ளார்கள்.

(இ–239)

# கண்டியில் விசேட சொற்பொழிவு

"மருத்துவக் கண்ணோட்டத் தில் நோன்பின் மகிமை" என்ற பொருளில் விசேட சொற் பொழிவு ஒன்று இன்று 27 ஆம திகதி கண்டி "ஒறாபி பாஷா" கலா நிலையத்தில் நடைபெற உள் ளது–

பிற்பகல் 3–30 மணிக்கு நடை பெற உள்ள இந்தச் சிறப்புச் சொற்பொழிவை மருத்துவ கலா நிதி எம எல் நஜிமுதீன் வழஙகு வார்–

ஒறாபி பாஷா நிலைய பணிப் பாளர் அல்ஹாஜ் எஸ் எம ஏ ஹஸன் இந்த வைபவத்துக்குத் தலைமை தாஙகுவார்–

(இ–017)

## கூட். விற்பனை நிலையத்தில்

# பட்டப் பகலில் கொள்ளை

வெலிகாமம, மார்ச் 25

கூட்டுறவு மொத்த விற் பனை நிலையம ஒன்றில் பட்டப்பகலில் 25,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டு உள் ளது.

ஆயுதமேந்திய இருவர் அஙகிருந்த மனேஜரையும ஏனையோர்களையும பய முறுத்திவிட்டு இப்பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்று உள் ளனர்.

அமபலாஙகொட, வதுகெதர கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் காலை எட்டு மணி யளவில் இப்பயஙகர சமபவம இடமபெற்று இருக்கிறது.

இது தொடர்பாக இதுவரை சந்தேக நபர்கள் எவரும கைது செய்யப்படவில்லை. கொள்ளை யிடப்பட்ட பணமும மீட்கப்பட வில்லை.

அமபலாஙகொட பொலீ ஸார் இது தொடர்பாக மேல் விசாரணைகளைச் செய்து வரு கின்றனர்.

(இ–331)

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4444
— 1990 மார்ச் 27 —

# "சார்க்" நிறுவனத்துக்கு நெருக்கடி ஏற்படுமா?

## இந்திய — பாக். உறவில் சகஜ நிலை ஏற்படாவிட்டால் நிலைமை மோசம்

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனமான "சார்க்" அமைப்பு நெருக்கடியை எதிர் நோக்குகிறது- ஏழு அங்கத்தவ நாடுகளும் செயலுறுதியான நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் ஆபத்து ஏற்படும்-

— இக்கருத்தைப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்-

கடந்த ஆண்டில் இலங்கையில் நடைபெறவிருந்த மாநாடு நடைபெறவில்லை- இந்த ஆண்டில் நடக்கும் என்பது இன்னும் முற்றுப் பெறவில்லை-

சார்க் கூட்டங்களில் இரு நாடுகளின் இரு தரப்பு விஷயங்களை விவாதிக்கப்பட முடியாது- எனினும் நாடுகளுக்கிடையில் பிரச்சினைகள் தீர்க்கப்படாத போது சச்சரவுகள் ஏற்படத்தான் செய்யும்-

இது இலங்கை — இந்தியப் பிரச்சினைக்குப் பொருந்தும்- இந்திய — நேபாளம் பிரச்சினைக்குப் பொருந்தும்- காஷ்மீர் பிரச்சனம் சிணைக்கும் பொருந்தும்-

அரசுகளுக்கிடையில் மனஸ்தாபம் ஏற்படுவதைப் பொருளாதாரப் பிரச்சினைகள் உக்கிரப்படுத்துகின்றன- பெருவாரியான அங்கத்தவ நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி திருப்திகரமாக இல்லை- ஏற்றுமதி வாய்ப்புகளும் அப்படியே- நிதி வசதிகளும் மோசமாகவுள்ளது-

கருத்தரங்குகள், தகவல் பரிவர்த்தனை — பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் ஆகியன தவிர்ந்த எதுவும் சார்க் ஸ்தாபன ஐந்தாண்டு ஆயுளில் சாதிக்கப்படவில்லை-

கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பிரதான விஷயங்கள் யாவை என்பதை சார்க் ஸ்தாபனம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்- கூட்டு விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல்படுத்துவதில் இந்நாடுகள் ஒத்துழைக்கலாம்-

ஐரோப்பாவில் ஈ. ஈ. சி ஸ்தாபனம் பொருளாதார ஒருங்கிணைப்பை கொண்டு வந்தது- அதன் மூலம் அரசுகளுக்கிடையில் உள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டது- 1992 ஆம் ஆண்டில் அரசியல் ஒருங்கிணைப்பும் ஏற்படவுள்ளது-

அதே போல ஆசிய நாடுகளில் அரசியல் ஒருங்கிணைப்பு குறித்த அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டும்-

அரசுகளுக்கிடையிலான பிரச்சினைகள் ஒரு புறமிருக்க அனைவருக்கும் பொதுவான பிரச்சினைகளும் உள்ளன- சிறிய நாடுகள், பெரிய அண்டைய நாட்டைக் கண்டு அஞ்சுகின்றன- இந்த பெரிய நாடு இந்தியா- இந்த அச்சத்தை நிவர்த்தி செய்யும் கடமை புதிய இந்தியத் தலைமையின் கரத்திலுள்ளது-

பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங பதவியேற்ற குறுகிய காலத்தில் இந்த அச்சத்தை ரொம்பவும் போக்கியுள்ளார்- இந்திய- வங்காளதேச, இந்திய — நேபாள பிணக்குகளுக்குப் படிப்படியாக பரிகாரம் தேடப்பட்டு வருகிறது- இது சார்க் ஸ்தாபனத்திற்கு அனுகூலமாக அமையும்-

அண்மையில் இலங்கையில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் நிபுணர்களின் பிராந்திய மாநாடு நடைபெற்றது- அது நல்லதொரு அறிகுறியாக அமைந்தது-

எனினும் இந்திய — பாகிஸ்தான் உறவுகள் சகஜ நிலைமைக்கு வர வேண்டும்- இந்த உறவுகள் தென் ஆசிய நிலவரத்தை நிர்ணயிக்கின்றன-

ஆகவே புதுடில்லியும் இஸ்லாமாபாத்தும் அவற்றின் பரஸ்பர அவநம்பிக்கையைக் கைவிட்டு விட்டு அத்துடன் மோதல் நிலைமையையும் நீக்கி விட்டு செயல்பட முன்வர வண்டும்-

அப்போது அவற்றுக்கு நல்ல காலம் பிறக்கும்- சார்க் ஸ்தாபனம் பலமடையும்- (ம)

## தலைநகரில் வீதி விபத்துகள்

தலைநகர வீதிகளில் கடந்த மாதம் 724 வாகன விபத்துகள் நடந்திருக்கின்றன.

அதாவது நாளொன்றில் சராசரியாக 26 விபத்துகள் நடந்துள்ளன.

இவற்றில் 6 பாதசாரிகள், சைக்கிளில் சென்ற ஒருவர், மோட்டார் சைக்கிள்காரர் ஒருவர் உட்பட்ப் பலர் உயிர் இழந்தார்கள்.

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, மருதானை, கொட்டாஞ்சேனை, கிருலப்பனை ஆகிய பகுதிகளிலேயே மிக மோசமான விபத்துகள் நடந்தன.

கொழும்பு போக்குவரத்துப் பொலீஸார் இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

வாகன விபத்துகள் நிகழ்வதற்குப் பல காரணங்கள் உள்ளன.

போதிய தகுதியும் அனுபவமும் இல்லாத பலர் வாகனங்களைச் செலுத்துகிறார்கள்.

இரண்டும் உள்ளவர்களில் எத்தனையோ பேருக்கு வீதி ஒழுங்குகளில் பரிச்சயம் இல்லை.

பலர் மதுபானம் அருந்தி விட்டு போதை ஏறிய நிலையில் வீதி ஒழுங்குகளைக் கவனிக்காமல் பேயோட்டம் ஓடுகிறார்கள்.

இன்று வீதியில் செல்லும் எல்லா வாகனங்களும் நல்ல நிலையில் உள்ளவை அல்ல. பழுதடைந்த வாகனங்க...

## மாணவர்களின் ஒழுக்க கட்டுப்பாட்டிற்கு சாரணியம் உதவுகின்றது

### சாரண உதவி ஆணையாளர்

அக்கரைப்பற்று மார்ச் 25

மாணவர்கள் கட்டுப்பாடும் ஒழுக்கமும் — நல்ல பண்பாடும் கொண்ட பிரஜைகளாக மாறுவதற்கு சாரணியம் பெரி...

தொடர்ந்து கூறியதாவது—

சாரணியம் இளமையிலேயே மாணவர்களுக்கு சிறந்த பல அனுபவங்களையும் போதனைகளையும் ஊட்டுகிறது- அது மாத்...

## வெள்ளிக்கிழமைகளில் கடைகளை 2 மணிக்கு திறக்க

### முஸ்லிம்களிடம் வேண்டுகோள்

கொழும்பு மார்ச் 26

புனித ரமழான் நோன்பு காலத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம்கள் தமது கடைகளைப் பிற்பகல் 2 மணிக்குத் திறந்து மாலை 6 மணிக்கு இன்றேல் 7 மணிக்கு மூட வேண்டும்-

சர்வதேச வை எம் எம் ஏ அசெம்பிளி இவ்வாறு முஸ்லிம் வர்த்தகர்களைக் கேட்டுள்ளது-

வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணிக்குத் கடைகளைத் திறந்த பகல் 12 மணிக்கு ஜும்ஆவுக்காக மூடி மீண்டும் பகல் 1-30 மணிக்குத் திறப்பது அர்த்தம் அற்றதாகும்-

இதற்கு உலமாக்களும் "தப்லீக்" பிரமுகர்களும் சமய சமூக சேவா நிறுவனங்களும் முஸ்லிம் சமய கலாசார விவகார ராஜாங்க அமைச்சும் ஆதரவளிக்க வேண்டும்-

இவ்வாறு அசெம்பிளியின் மாவட்ட ஆளுநர் ஜனாப் எம் ஹஸன் அப்பாஸி ஷரீப் தெரிவித்து உள்ளார்- (இ—007)

## நோன்பு காலத்தில் மக்காவில் நிகழும் சமய நிகழ்ச்சிகளை

### டி. வி. யில் ஒளிபரப்ப பிரேரணை

கொழும்பு, மார்ச் 26

ரமழான் நோன்பு காலத்தில் புனித "லைலத்துல்-கத்ர் இரவில் புனித மக்காப் பள்ளி வாசலில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்ப வேண்டும்-

தகவல்துறை ராஜாங்க அமைச்சரை இவ்வாறு கோரும் ...

...தற்காக முறையான உடனடி திட்டம் ஒன்று மாநகர சபையினரால் ஆரம்பிக்கப்பட வேண்டும்-

* மாலை ஏழு மணிக்குப் பின் நகரில் பஸ் சேவை மோசமாக உள்ளது-

இதனால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர் நோக்குகின்றனர்-

எனவே மாலை 7 மணிக்குப் ...

தரவான பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி சுகாதார உணவு ...

## செய்தித் திரட்டு

### நடமாடும் சுகாதார சேவை

நாத்தாண்டி மார்ச் 25

நாத்தாண்டி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த பட்டுலான கிராமத்தில் அண்மையில் நடமாடும் சுகாதார சேவை ஒன்று நடத்தப்பட்டது-

ராஜாங்க நிதியமைச்சர் திரு ஹெரல்ட் ஹேரத் இதற்குத் தலைமை தாங்கினார்-

மாறாவிலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி எஸ் ஏ குமாரதுங்கவும், வைத்திய அதிகாரி டாக்டர் லால் திஸ்ஸேராவும் நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்தனர்- (இ—225)

### விடுதலைப் புலிகளின் க. பொ. த (சா. த) கருத்தரங்குகள்

மூதூர் மார்ச் 25

மூதூர் பிரதேச பாடசாலைகளில் இருந்து இம்முறை க பொ த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் நலன் கருதி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் இங்கு 2 நாள் கருத்தரங்கினை நடத்தினர்-

இக்கருத்தரங்குகள் மூதூர் அல்நஹார் மகளிர் மகா வித்தியாலயம் — கிளிவெட்டி மகா வித்தியாலயம் — சேனையூர் மகா வித்தியாலயம் முதலான இடங்களில் அண்மையில் நடைபெற்றன-

இக்கருத்தரங்குகளில் விஞ்ஞானம், கணிதம் — ஆங்கிலம் சமூகக் கல்வி — தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் நிகழ்த்தப்பட்டன- (இ—401)

### பொருட்கள்: தங்குதடையின்றி வழங்கத் திட்டம்

பழுதடைந்த வாகனங்களும, ஆயுள் முடிந்த லொட லொட வாகனங்களும கூட பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை எந்தச் சாரதியாலும எப்பொழுதும நேர் சீராகச் செலுத்த முடியுமா?

சாரதிகளின் குறைபாடும வாகனங்களின் நிலைமையும ஒரு புறம இருக்க வீதிகளும பல விபத்துகளுக்கு மூலகாரணமாக அமைந்து விடுகின்றன.

எத்தனையோ வீதிகள் சரிவரப் பராமரிக்கப்படாத காரணத்தால் சீரழிந்து வாகனப் போக்குவரத்துக்கு லாயக்கற்றவையாக இருக்கின்றன.

பெருமபான்மையான வீதிகள் மிகவும ஒடுக்கமானவை. இன்றைய தேவைக்கு ஏற்ப வீதிகள் அகலமாக்கப்படவில்லை.

குறிப்பாகத் தலைநகரில் இன்று வாகனங்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து விட்டது. அதற்கு ஈடு கொடுப்பதற்கு வேண்டியளவு வீதிகள் இல்லை.

வீதிகளில் வாகனங்கள் அதிகமாகச் செல்கின்றன என்றால் பாதசாரிகள் கவனமாகப் போக வேண்டும அவர்களில் பலர் அப்படிச் செல்வதில்லை.

இந்தக் குறைபாடுகள் எல்லாவற்றையும நீக்கினால் தான் விபத்துகளைக் குறைக்கலாம. உயிர் இழப்புகளையும வாகனச் சேதத்தையும தவிர்க்கலாம.

போக்குவரத்துப் பொலீஸார், வாகனப் போக்குவரத்து அணையாளர் திணைக்களத்தினர், சாரதிகள், பொதுமக்கள் அனைவரும ஒருங்கே முயற்சி செய்தால் பலன் கிடைக்கும.

---

டும கொண்ட பிரஜைகளாக மாறுவதற்கு சாரணியம பெரிதும உதவுகின்றது- எனவே சாரணியத்தில் மாணவர்கள் சேர்வதன் மூலம அவர்களின் எதிர்காலம சிறப்பானதாக இருக்கும- வாழ்க்கை அனுபவங்களைப் பெறவும சாரணியம உதவுகின்றது-

கல்முனை மாவட்ட சாரண உதவி ஆணையாளர் ஜனாப் எம ஐ எம முஸ்தபா இவ்வாறு கூறினார்-

சம்மாந்துறை மத்திய கல்லூரியில் சாரணியத்தின் தந்தை "பேடன் பவுல்" நினைவு தினம அண்மையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது-

மேற்படி விழா சாரண ஆசிரியர் ஜனாப் எம ஐ ரசூல் தலைமையில் நடைபெற்றது- இந்த வைபவத்தில் ஜனாப் முஸ்தபா

யும ஊட்டுகிறது- அது மாத்திரமன்று எவ்வேளையும யாருக்கும உதவும மனோ நிலையையும அது தோற்றுவிக்கின்றது-

எனவே நாம சாரணியத்தில் மிகவும பெருமையுடன் பங்கு கொண்டு எம்மை சிறந்த பிரஜைகளாக மாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும-

இந்த வைபவத்தில் "சார்க்" ஜம்போரி பொருட்காட்சியும இடமபெற்றது- பிரதம அதிதியாக பிரபல சமூக சேவையாளரும பிரஜைகள் குழுவின் தலைவருமான சட்டத்தரணி யூ எல் ஏ முதையதீனும கலந்து கொண்டார்- (இ—035)

---

## ரமழான் பற்றி சொற்பொழிவு

கொழுமபு, மார்ச் 26

புனித ரமழான் ஆரமபத்தை முன்னிட்டு சோனக இஸ்லாமிய கலாசார நிலையமும, அகில இலங்கை சோனகர் சங்கமும இணைந்து எதிர்வரும 28ஆம் திகதி மாலை சேர் ராசீக் பரீத் கேட்போர் கூடத்தில் ஒரு வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளன-

மௌலவி எஸ் எம ஏ எம முஸமமில் "ரமழானின் சிறப்பு" பற்றி உரையாற்றுவார்-

இந்தோனேஷியத் தூதுவர் ஜனாப் ஆர் சொஜோஜோ பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்-

(ல—007)

---

அமைச்சரை இவ்வாறு கோரும ஒரு பிரேரணை தொடர்பாகக் கொழுமபு மாநகரசபை விவாதிக்க உள்ளது-

மாநகரசபையின் மாதாந்தப் பொதுச் சபையில் இது தொடர்பாக விவாதிக்கப் படும-

மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எஸ் எச் எம காமில் இதுபற்றி விவாதிக்க முன் அறிவித்தல் கொடுத்திருக்கிறார்-

மாநகரசபை விவாதிக்க இருக்கும மற்றும் சில பிரேரணைகள் வருமாறு—

* எயிட்ஸ் நோயிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்ப

எனவே மாலை 7 மணிக்குப் பின் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும-

* நகர வீதிகளிலும நடைபாதைகளிலும வாழும அநா

தரவான பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி சுகாதார உணவு வசதிகளை வழங்கி அவர்களை நற்பிரஜைகளாக மாற்ற மறுவாழ்வுத் திட்டம ஒன்று ஆரமபிக்கப்பட வேண்டும-

[இ—007]

---

## வழங்கத் திட்டம்

கண்டி மார்ச் 25

தமிழ் - சிங்கள புத்தாண்டையொட்டி கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சகல கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கும உணவு மற்றும கணி வகைகளைத் தங்கு தடையின்றி நியாயமான விலையில் பெற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன-

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்கியிருக்கும நிதி நெருக்கடியைத் தவிர்க்கும பொருட்டு 48 கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கு மக்கள் வங்கி கடன் உதவியையும வழங்க முன்வந்துள்ளது- (—017)

---

## புலமைப்பரிசில் உதவிப் பணம் இன்றி அவதி

இராகலை, மார்ச் 25

புலமைப் பரிசில் உதவிப் பணம கிடைக்காததால் ஏழை பெற்றோர்கள் கஷ்டப்படுகின்றனர்-

கடந்த சுமார் 5 - 6 ஆண்டுகளாக வலப்பனை தேர்தல் தொகுதியிலுள்ள இராகலை பகுதியிலிருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு உதவிப் பணம இன்னமும கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் நுவரெலியா மாவட்ட கல்வித் திணைக்களத்துக்கும வலப்பனை கோட்டக் கல்வி அலுவலகத்திற்கும அடிக்கடி சென்று வெறுங்கையுடன் திருமபுகின்றனர்- (எ—265)

---

யாழ் மாநகர சபை எல்லை

## உடல் உளக் குறைபாடு உள்ளோருக்கு புனர்வாழ்வு

வவுனியா மார்ச் 25

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் உடல் உளக் குறைபாடு உள்ளோருக்குப் புனர்வாழ்வளிக்கப்படும- இதனை யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் யாழ் மாநகர சபையினர் மேற்கொள்ள இருக்கிறார்கள்-

இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தொண்டர்களைச் சேர்க்கும திட்டம நடைமுறைப் படுத்தப்பட உள்ளது-

தொண்டர்களுக்கு விசேட பயிற்சியும அளிக்கப்படும-

முக்கியமாக உடல் உளக் கோளாறு உடையோரை குடுமபச் சூழலிலிருந்து பிரிக்காமல் புனர்வாழ்வு அளிக்கப்படும-

சமுதாயத்தில் இரண்டாந் தரப் பிரஜைகளாக இவர்களைத் தொடர்ந்து இருக்க விடாது முன்னுரிமை அளித்து மீட்க வேண்டியது இத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் ஆகும-

இவ் அடிப்படையில் மாநகர சபையினர் உடல், உளக் கோளாறு உடையவர்களைப் பதிவு செய்யும வேலைகளை விரைவில் ஆரமபிக்க இருக்கிறார்கள் (இ—105)

---

# ஆசிரியர் தொழிலுக்கு க. பொ. த. (சா. த) தகைமை போதுமானதல்ல:

## மா. ச. கல்வி அமைச்சர்

அட்டன், மார்ச் 35

ஆசிரியர் தொழிலுக்கு க பொ த சாதாரண தரத் தகைமை போதுமானதல்ல-

மலையகத்தில் நிலவும ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கத்தில் தான் க பொ த சாதாரண தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை அரசு வழங்கி வருகிறது.

இவ்வாறு கூறினார் மத்திய மாகாண சபை கல்வி அமைச்சர் திரு தொண்டமான் இராமநாதன்-

அமைச்சர் அண்மையில் அட்டன் ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வரும பெருந்தோட்ட ஆசிரியர் பயிற்சித் திட்ட நிலையத்திற்கு திடீர் விஜயம ஒன்றை மேற்கொண்டார்- ப

மேற்படி பயிற்சித் திட்டத்திற்கு அண்மையில் தெரிவு செய்யப்பட்ட மலையக இளைஞர், யுவதிகள் மத்தியில் அமைச்சர் இராமநாதன் மேலும பேசுகையில் கூறியதாவது—

இந்த ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு தெரிவாகியுள்ள மலையகத்தைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் தமது கல்வித் தகைமைகளை மேலும வளர்த்துக் கொள்ள வேண்டும-

ஆசிரியத் தொழிலுக்கு தகைமையுடையவர்களாக உங்களை நீங்களே வளர்த்து பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும-

ஆசிரியர் தொழிலை சமபள திற்கான ஒரு உத்தியோகமாகக் கருதாமல் கடமை உணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும-

ஆசிரியர் தொழிலுக்கு ஏற்றவர்களாக உங்களை உருவாக்கும நோக்கத்துடனேயே சுவீடன், ஜெர்மன் சமஷ்டி குடியரசு போன்ற வெளிநாட்டு உதவிகளுடன் உங்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன-

இவற்றை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும-

இவ்வாறு அமைச்சர் இராமநாதன் கூறினார்-

[ஜ—096]

# இந்திய இராணுவ பலம்

# அதிகரிப்பால் பாக். கவலை

## வறுமையால் பீடிக்கப்பட்ட எமக்கு

## இது பெரும் சுமை என! பெனாஸிர் கருத்து

இஸ்லாமாபாத் மார்ச் 26

**இந்தியா அதன் இராணுவ பலத்தை அதிகரித்து வருகிறது. வறுமையால் பீடிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு இந்தியாவின் இராணுவ பலம் அதிகரிப்பு பெரும் சுமையாக இருக்கிறது.**

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ ஞாயிறன்று இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பாகிஸ்தான் தூதவர்களாகப் பணி புரிபவர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பெனாஸிர் உரையாற்றினார்— 38 தூதவர்கள் அங்கு குழுமியிருந்தனர்—

அங்கு அவர் தொடர்ந்த பேசுகையில் கூறியதாவது—

இன்றைய உலக நிலையில் அரசியல் மற்றும பொருளாதார சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய நிலையில் தூதவர்கள் செயலாற்ற வேண்டும—

சர்வதேச உதவிகள் எதிர் வரும காலங்களில் குறைந்துவிடலாம— பாகிஸ்தான் போன்ற நாடுகள் வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதென்பது இயலாத ஒரு காரியமாகும—

அரபு மற்றும ஆபிரிக்க சந்தைகள் வாயிலாக லாபம தேடிக் கொள்ள பாகிஸ்தான் முயல வேண்டும—

விசேஷமாக ரஷ்யாவும இதில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும—

இவ்வாறு பெனாஸீர் கூறினார்—



பெனாஸிர்

### கமாண்டர் சுட்டுக் கொலை

இஸ்லாமாபாத் மார்ச் 26

ஆப்கானிஸ்தான் கெரில்லா கமாண்டர் நஸீம அவுன்ஸாடா உட்பட அவரது மெய்ப் பாதுகாவலர்கள் ஐந்து பேர் ஞாயிற்றுக்கிழமை பேஷாவாரில் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது—

பாபி என்னும நகருக்கு சமீபமாக இவர் சென்று கொண்டிருக்கையில் இவரது கார் மறிக்கப்பட்டு இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது— [எ]

### கம்யூ. கட்டிடம் ரஷ்ய துருப்புகள் வசம்

விலினியஸ், மார்ச் 26

ரஷ்ய துருப்புக்கள் லித்துவேனியாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி கட்டிடங்கள் இரண்டை முற்றுகையிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

98 ரஷ்ய தாங்கிகள் லித்துவேனியாவுக்குள் சனிக்கிழமை பிரவேசித்தன, ஆயினும் ஞாயிற்றுக்கிழமை அங்கு நிலைமைகள் சீராகவே இருந்தன. (எ)

மலேஷியாவில்

### அரசியல் தேவைக்கு நிதி உதவி பெறும் எதிர்கட்சிகளுக்கு எச்சரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 26

அரசியல் நோக்கங்களின் பொருட்டு பிற நாடுகளிடமிருந்து நிதி உதவி பெறும எதிர்க்கட்சிகளை மலேஷிய அரசாங்கம் எச்சரித்திருக்கிறது.

தத்தம அரசியல் போக்கிற்காக உதவி பெறுவோர்க்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மலேஷிய பிரதமர் மஹதிர் மொகமட் பத்திரிகையாளர் மாநாடொன்றில் இதுபற்றிக் கூறினார்.

எதிர்க்கட்சியினர் தமது நிதி நிர்வாகங்களை மலேஷிய சட்டத்துக்கு ஏற்ப வைத்துள்ளனரா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படும. (எ-ரி)

பாதிக்கப்பட்ட

### சீக்கியருக்கு நிவாரணம் பஞ்சாப் அரசு நிதி ஒதுக்கியது

புதுடில்லி மார்ச் 26

சீக்கிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம அளிக்கவென பஞ்சாப் அரசாங்கம் 1 கோடி 20 லட்சம டாலர்களை ஒதுக்கியிருக்கிறது—

பஞ்சாப் அரசாங்கம இது பற்றிய தகவலை ஞாயிறன்று வெளியிட்டது—

பஞ்சாப்பில் நடந்து வரும பிரிவினைவாதப் போராட்டங்கள் காரணமாக இவ்வாண்டில் மட்டும் 585 பேர் உயிரிழந்துள்ளனர்—

1982ஆம ஆண்டு ஏப்ரல் 1ஆம திகதி வரை தீவிரவாதச் செயல்களால் உயிரிழந்தவர்களில் சுமார் 5800 குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பணம வழங்கப்படும—

பஞ்சாப் நிதி ஆணையாளர் ஏ எல் கபூர் இத்தகவலை வெளியிட்டார்—

1984ஆம ஆண்டில் பஞ்சாப்புக்கு ஓட்டமெடுத்த ஆயிரக்கணக்கானோரும இந்த நிதி மூலம் பயன்பெறுவர்—

இந்திரா காந்தி படுகொலையை அடுத்து இந்தியாவில் சீக்கிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம ஆரம்பமாகியது— இவ்வேளையிலேயே ஆயிரக்கணக்கானோர் பஞ்சாப்புக்குத் தப்பியோடினர்— [எ]

## உலகச் செய்திகள்

கடத்தப்பட்ட

### காஷ்மீர் அரசியல்வாதி தூக்கிலிட்டுக் கொலை

ஸ்ரீநகர், மார்ச் 26

கடத்தப்பட்ட காஷ்மீர் அரசியல் வாதி ஒருவரின் சடலம ஞாயிறு காலை கண்டு பிடிக்கப்பட்டது—

முஸ்லிம தீவிரவாதிகள் அவரைக் கடத்திச் சென்று அவரைத் தூக்கிலிட்டு கொலை செய்துள்ளனர்—

இந்திய ஆட்சிக்கெதிராக போராட்டம நடத்தும தீவிரவாதிகளே தாம இக் கொலையைச் செய்ததாக அறிவித்திருக்கின்றனர்—

மிர் குலாம முஸ்தபா (73) வின் உடல் ஸ்ரீநகர் சுற்று வட்டாரத்தில் இருந்தே கண்டு பிடிக்கப்பட்டது—

ஹிஸ்புல் முஜாஹிதின் குழு சார்பில் பேசிய தீவிரவாதிகளில் ஒருவரே குலாம முஸ்தபாவின் கொலைக்கு தாம பொறுப்பாளிகள் எனத் தெரிவித்திருக்கிறார்—

உள்ளூர் செய்தி ஸ்தாபனமொன்றுக்கு தொலை பேசி மூலம தொடர்பு கொண்ட அவர் முஸ்தபாவை நாம தூக்கிலிட்டு விட்டோம எனத் தெரிவித்தார்—

### ஜேம்ஸ் பேக்கர் நாடு திரும்பினார்

வாஷிங்டன், மார்ச் 26

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ஆபிரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த ஞாயிறு நாடு திரும்பினார்.

இவ்விஜயத்தின் போது அங்கோலாவின் உள்நாட்டுப் போரையும், தென் ஆபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கையையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்படி அவர் வற்புறுத்தினார்.

கடந்த சனிக்கிழமை சையர் ஜனாதிபதி மொபுட்டு செசெ செக்கோவுடன் அங்கோலா நிலைமை பற்றிப் பேசினார். (எ-ரி)

### பல்கலைக் கழகங்களில் நவீன உபகரணங்கள் போதியளவு இல்லை

### கிழக்கு பல்கலை வேந்தர் கவலை

கொழும்பு, மார்ச் 26

பல்கலைக்கழகங்களில் கற்...

கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம ஷுக்ரி, நீதியரசர் ஜனாப்...

### கப்பல் விபத்தில் 7 பேரை காணவில்லை

டோக்கியோ, மார்ச் 26

தென் கொரிய மீன்பிடிக் கப்பல் ஒன்று ஆழ்கடல் பகுதியில் விபத்தில் சிக்கியது. இந்தக் கப்பலிலிருந்த மாலுமிகள் ஏழு பேரைக் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

111 தொன் எடையுள்ள இம...

### ஆடதுசார் தீவிரவாதிகள் கைது

ஸ்தான்புல், மார்ச் 26

27 ...

பிரிவினைவாதிகள்...

கொழும்பு, மார்ச் 26

பல்கலைக்கழகங்களில் கற்பிப்பதற்கு ஏற்ற நவீன உபகரணங்கள் போதாமல் இருக்கிறன.

எமது பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் கற்பிப்பதற்கு ஏற்ற சஞ்சிகைகள், மற்றும் தொடர்பான நூல்களும் இல்லை.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம் யூ சுல்தான் பாவா இவ்வாறு கவலை தெரிவித்தார்.

கோட்டை சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் மர்ஹூம் அஹ்மட் ஹுஸைன் மாக்கான் மாக்கார் ஞாபகார்த்த நூலகத்தை (19-3) மாலை திறந்து வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத் தலைவர் ஜனாப் எம் ஏ கரீம் தலைமை வகித்தார்.

பேராசிரியர் சுல்தான்பாவா தொடர்ந்து கூறியதாவது-

எமது பல்கலைக்கழக நூலகங்களில் உள்ள பாடப்புத்தகங்களுள் பெரும்பான்மையானவை பதினைந்து, இருபது வருடங்கள் வரை பழமைவாய்ந்தவை.

இவை 1975 ஆம் ஆண்டுக்கு முன் பிரசுரம் ஆனவை.

பல்கலைக்கழகங்களில் கற்பிப்பதற்கு வேண்டிய நவீன உபகரணங்கள் முழுமையாக காணப்படவில்லை.

இது நாம் எதிர்நோக்கியுள்ள ஒரு பெரும் ஆபத்தாகும். உயர்நிலை மாணவரின் பயிற்சி மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கிறது.

முஸ்லிம் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு முஸ்லிம் இயக்கங்களும் பெரும் தொண்டாற்ற வேண்டும் என்றார்-

கலாநிதி அல்ஹாஜ் எம் ஏ எம் ஷுக்ரி, நீதியரசர் ஜனாப் எம் ஜமீல் ஆகியோரும் பேசினர்-

பேராசிரியர் சுல்தான் பாவா நூலகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்-

[எ—007]

... வில்லை என அறிவிக்கப்படுகிறது.

111 தொன் எடையுள்ள இம் மீன்பிடிக் கப்பல் 34 மாலுமிகளுடன் சென்றது. விபத்து நேர்ந்ததும், 27 பேரை ஏனைய தென் கொரிய மீன்பிடிக் கப்பல்கள் காப்பாற்றின. (எ-ரி)

## புனித ரமழானை முன்னிட்டு

# உடுதெனிய ஜும்ஆ பள்ளிவாசலில் விசேட தராவிஹ் தொழுகை

ஹேவாஹெட்ட மார்ச் 25

புனித ரமழானை முன்னிட்டு உடுதெனிய மடிகே ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்ஆப் பள்ளிவாசலில் வழமைப் போல் இம்முறை விசேட தராவிஹ் தொழுகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-...

இப்பள்ளிவாசலின் பரிபாலன சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது-

குர்ஆன் மத்ரஸா மாணவர்களிடையே அல்குர்ஆன் ஓதும் வழக்கத்தை அதிகரித்தல்-

சிறந்த முறையில் ஓதுவதற்கு பயிற்சிகளை வழங்குதல ஆகிய நோக்கங்களுக்கு அமைய ஹிஸ்பு மஜ்லிஸ் நிகழ்ச்சியையும் விசேட ஒழுங்கில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது-

பெண்களுக்கான பிரத்தியேக தராஹ் நிகழ்ச்சிகள் இம்முறை பள்ளிவாசலில் அமைக்கப்பட்டுள்ள மத்ரஸா மண்டபத்தில் நடைபெறும்-

பள்ளிவாசலில் நோன்பு திறப்பவர்களுக்கு வசதியாக மேலும் பல ஏற்பாடுகளும் புதிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- [இ—009]

## நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, மார்ச் 26

கடலில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவர் ஒருவன் நீரில் மூழ்கி மரணமானார்-

யாழ்ப்பாணம் சென் ஜோன் கல்லூரியின் பழைய மாணவரான வில்பிரட் ரஞ்சன் (வயது 19) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்-

சுண்டிக்குளி வாசியான இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 1990 ஆம் வருட மருத்துவ பீடத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்- (இ-வ)

## 12 சடலங்கள் மீட்பு

சுமார் 12 இனந் தெரியாத நபர்களின் பிரேதங்கள் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன-

புத்தளத்திலிருந்து அனுராதபுர வீதியில் 5 ஆம் மைலுக்கருகில் உள்ள செல்லக் கண்டல் என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது-

இவற்றில் ஒன்றிரண்டு பெண்களின் சடலங்களாகவும் இருக்கலாம் என இப்பகுதி கிராம வாசிகள் தெரிவித்தனர். (இ-241)

# பிரிவினைவாதிகள் காஷ்மீரில் தீவிரம்

## கம்யூ. தலைவர் படுகொலை

ஸ்ரீநகர், மார்ச் 26

இந்திய ஆட்சிக்கு எதிரான தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை காஷ்மீர் பிரிவினைவாதிகள் முடுக்கிவிட்டிருக்கிறார்கள்-

அவர்கள் கமயூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவரைப் படுகொலை செய்தார்கள்- பொலீஸ் அதிகாரி ஒருவரையும் கொன்றார்கள்- வேறொரு அரசியல்வாதியைக் கடத்திச் சென்றார்கள்-

இத்தகவலைப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்கள்-

கடந்த வெள்ளிக்கிழமை கமயூனிஸ்ட் தலைவரான அப்துஸ் சத்தார் ரன்ஜூத் படுகொலையானார்- இக்கொலைக்கு ஜம்மு - காஷ்மீர் மாணவர் விடுதலை முன்னணி உரிமை கோரியிருக்கிறது-

கடந்த சனிக்கிழமை பிரதிப் பொலீஸ் அதிபர் குலாம் ஹஸன் அதப்பாஸும் கொல்லப்பட்டார் இக்கொலைக்கு இந்த முன்னணி உரிமை கோரியுள்ளது-

36 மணி நேரத்திற்குள் 10 பிரிவினைவாத தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும்- என்றும் தவறின் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருக்கும் அரசியல்வாதியான மீர் குலாம் யப் போவதாகவும் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்-

குலாம் முஸ்தபா கடந்த வெள்ளிக்கிழமை கடத்திச் செல்லப் பட்டார்-

[ண]

... அவர் முஸ்தபாவை நாம தூக்கிலிட்டு விட்டோம் எனத் தெரிவித்தார்-

இந்தியா ...இரகசியப் பிரிவுக்கு அவர் தகவல் கொடுத்தார் என்பதற்காகவே நாம் அவரைத் தூக்கிலிட்டோம் அவரது டையரி ஒன்றின் மூலம் இத் தகவல் பெறப்பட்டது முஸ்தபா இஸ்லாமிய கோட்பாடுகளை மீறி வந்துள்ளார்- மதுபானம் அருந்துவதோடு தவறான நடவடிக்கைகளிலும் இவர் ஈடுபட்டுள்ளார் என தொலைபேசியில் பேசிய நபர் கூறினார்-

[எ]

ஸ்தான்புல், மார்ச் 26

27 ... தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதில் ஒன்பது பேர் பெண்களாவர்.

துருக்கியிலுள்ள சட்டவிரோத புரட்சிவாத கமயூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் திட்டமிட்டு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

(எ-ரி).

## கொன்ட்ரா கிளர்ச்சியாளர்

# ஒப்பந்தத்தை மீறினால் கட்டாயத்தின் பேரில் ஆயுதங்கள் பறிமுதல்

மனாகுவா, மார்ச் 26

நிக்கரகுவா கொன்ட்ரா கிளர்ச்சியாளர்கள் ஒப்பந்தத்தை மீறினால் அவர்களது ஆயுதங்கள் கட்டாயத்தின் பேரில் பறிமுதல் செய்யப்படும்.

இதுபற்றி உத்தியோகபூர்வ சான்டினிஸ்ட்டா பத்திரிகையொன்று ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வெள்ளியன்று சான்டினிஸ்ட்டா படை வீரர்கள் 12 பேர் (வன்முறை) கொல்லப்பட்டனர். நிக்கரகுவா வடக்கில் இப்படுகொலைகள் இடம்பெற்றன.

இதனையடுத்தே மேற்படி பத்திரிகை நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கெதிராக மேற்படி செய்தியை வெளியிட்டிருக்கிறது.

ஏப்ரல் 20 முட்டும் கொன்ட்ரா கிளர்ச்சியாளர்கள் காத்திராமல் உடனடியாக அவர்கள் ஆயுதங்களைக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அந்த பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ).

# வங்காளதேசத்தில் வீசிய கடும் புயலுக்கு பலர் பலி 100 பேர் காயம்

டாக்கா, மார்ச் 26

வங்காளதேசத்தில் மத்திய, தென பகுதிகளில் வீசிய கடும் புயல் காரணமாக 20 பேர் உயிரிழந்தனர்.

100 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு, கடும் மின்னல், மழையுடன் புயல் வீசியது, இதனால் ஆயிரக்கணக்கான வீடுகள, கட்டிடங்கள் தரைமட்டமாகின. தொலைத்தொடர்பு சாதனங்கள் செயலிழந்தன.

வீடுகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கின.

சிட்டகொங, கொமிலா, டாக்கா மாவட்டங்களில் கட்டிடங்களும், வீடுகளும் தரைமட்டமாகின.

தகட்டுக் கூரையுடன் கூடிய வீடுகள் சரிந்ததால் டாக்கா தமராய் பகுதி வாசிகள் 10 பேர் இறந்தனர்.

புயலின் வேகத்தில் பறந்து வந்த பொருட்கள் தாக்கியதில் மூன்று பேர் இறந்தனர். இச் சம்பவம் கொமிலா மாவட்டத்தில் இடம்பெற்றது.

சிட்டகொங்கில் ரஹோசான், சிக்டாய் பகுதிகளில் 7 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்தனர்.

(எ).

# நகர சுத்தி தொழிலாளருக்கு நவீன குடியிருப்பு வசதிகள்

## செல்லச்சாமி நடவடிக்கை எடுப்பார்

புத்தளம, மார்ச் 25

புத்தளம நகர சுத்தித் தொழிலாளர்கள் இதுவரை காலமும ஆதிகால லயன்களி லேயே வசித்து வருகின்றனர். இதனை மாற்றியமைத்து அவர்களுக்கும நவீன குடியிருப்பு வசதிகள் அளிக்க வேண்டும.

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச் சாமியிடம இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அமைச்சர் செல்லச்சாமி அதனைப் பரிசீலனை செய்த இக் குறையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

மூன்றாவது ஜனாதிபதி நடமாடும சேவைத் திட்டம புத்தளத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வின் போது புத்தளம இந்து கலை, கலாசார சமூக முன்னேற்ற ஒன்றியத்தின் தூதுக்குழுவொன்று அமைச்சரிடம பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்தது.

இத்தூதுக்குழுவில் ஒன்றியத்தின் தலைவர் திரு கே செல்வராசா, திரு கே கனகரத்தினம (இ தொ கா மாநில அமைப்பாளர்), திரு உடப்பு வீரசொக்கன், திரு வடிவேலன் ஆகியோர் சென்றனர்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள மற்ற கோரிக்கைகள் பின்வருமாறு—


"நகரசுத்தி தொழிலாளர்கள் தமது சொந்த முயற்சியினால் பாடசாலை ஒன்றை அமைத்துள்ளனர். இதனை அபிவிருத்தி செய்வதுடன் இதே சமூகத்தை சேர்ந்த ஒருவரை ஆசிரியராக நியமிக்க வேண்டும.

நகரசுத்தித் தொழிலாளர்களின் ஓய்வுகாலப் பணம பெறுவதில் பெரும கஷ்டங்களும குளறுபடிகளும உள்ளன. இதனை நிவர்த்தி செய்து தரல் வேண்டும.

காணி வழங்கலில் நகரசுத்தி தொழிலாளர்களுக்கும முன்னுரிமை வழங்க வேண்டும.

தமிழ் பேசும மக்களுக்காக அவர்களின் கலை, கலாசாரங்களை வளர்க்க ஓர் கலாசார மண்டபம அமைத்தல் வேண்டும.

மேற்படி அனைத்து கோரிக்கைகளையும ஏற்றுக் கொண்ட அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக உறுதி கூறினார். (இ-241)



### பேரீச்சம்பழம் அன்பளிப்பு

சவூதி அரேபிய மன்னர் பஹ்த் ஒரு தொகை பேரீச்சம பழங்களை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார்—

பொலன்னறுவை கதுருவெல ஜும்மஆப் பள்ளிவாசலில் வைத்து அந்த மாவட்ட ஜும்மஆப் பள்ளிவாசல்களுக்கு இந்த பேரீச்சம பழங்கள் கையளிக்கப்பட்டன—

கதுருவெல ஜும்மஆப் பள்ளிவாசலுக்கான பேரீச்சம பழத்தொகையை பள்ளிவாசலின் பிரதம நமபிக்கையாளர் வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் பொலன்னறுவை மாவட்ட எம பி ஜனாப் அப்துல் மஜீத் அரச உதவி கொறடா அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் எம பி ஆகியோரிடம இருந்து பெற்றுக்கொண்ட போது பிடிக்கப்பட்ட படம—

# மட்டக்களப்பில் வீடமைப்புகடனுக்கு விண்ணப்பிக் கலாம்

மட்டக்களப்பு மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 லட்சம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்களை பதிவு செய்யும நடவடிக்கைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன—

இது தொடர்பான மேற்படி சபையின் மாவட்ட முகாமையாளர் திரு கே பத்மநாதன் பத்திரிகை[illegible]களிடம தெரிவித்தார்.

நகர உப வீடமைப்புத் திட்டத்தின் கீய கடன் பெற விருமபுவோர் இமமாதம 31 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவு செய்து கொள்ள வேண்டும—

கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெற விருமபுவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும மே மாதம் 15ஆம திகதிக்கு முன் கையளிக்க வேண்டும—

இவர்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன—

மேற்படி கடன்களை பெற தகுதியுடையோர் வயது எல்லை 18—50 ஆகும— குடுமப வருமானம் 701 ரூபாவிலிருந்து 2400 ரூபாவாக இருக்க வேண்டும—

இக்கடன்களைப் பெற எந்தவொரு அமைப்பின் சிபார்சோ தனிப்பட்ட நபரின் சிபார்சோ தேவையில்லை— விண்ணப்ப படிவங்களை பெற்று பதிவு செய்தால் பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படும—

# வன்னி மாவட்ட விவசாயிகளின் அவலநிலை

வவுனியா மார்ச் 25

நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்வாகங்கள் மாற்றப்பட்டதால், வன்னி, மன்னார் மாவ

ராஜபுர நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன—

இதனால் இப்பகுதி தமிழ்

## இலங்கை பல்கேரிய ஒப்பந்தம் நீடிப்பு

கொழுமபு மார்ச் 25

1970 ஆம ஆண்டு பல்கேரியாவிற்கும இலஙகைக்கும இடையில் கலாசார விஞ்ஞான அபிவிருத்தி ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்பட்டது—

இவ் ஒப்பந்தம 1990 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது—

தற்போது இவ்வொப்பந்தம 1990 ஆம ஆண்டில் இருந்து 1991 ஆம ஆண்டு வரையிலும நீடிக்கப்பட்டுள்ளது—

மேற்படி நீடிப்பதுற்கான ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்னாவும, பல்கேரிய தூதுவரும கைச்சாத்திட்டனர்—

(இ-455)

# திருமலையில் 9 இயந்திரத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன

கொழுமபு, மார்ச் 26

ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தின் முன்னாள் அங்கத்தவர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து திருகோணமலையில் 9 இயந்திரத் துப்பாக்கிகளும, 614 தோட்டாக்களும கைப்பற்றப்பட்டன.

இவற்றை இலஙகை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

இது அரசாஙகம (கடந்த 23ஆம திகதி) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள மேலும பல சமபவங்கள் வருமாறு—

ஆயுதம தாஙகிய மூன்று இளைஞர்களால் அமபாறையைச் சேர்ந்த ஏ ஜீ தர்மதாசவின் கடை கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

அமபாறை உருகுணகம என்னுமிடத்தில் 5 ஆயுதம தாஙகிய தமிழ் இளைஞர்கள் வீ ஆர் தியோனஸ் வீட்டில் நுழைந்து 37,000 ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துள்ளனர்.

இதுபற்றி பாதுகாப்புப் படையினருக்கு தெரிவிக்கப்பட்டதும. பாதுகாப்புப் படையினர் 2 தீவிரவாத சந்தேக நபர்களையும. துப்பாக்கிகளையும, வெடி மருந்துகளையும அமபாறையில் கைப்பற்றினார்கள்.

பாதுகாப்புப் படையினர் ஊவா மாகாணத்தில் தியாகந்போல, மலிகாவல, ரகுகல, தன்னலவில் ஆகிய இடஙகளில் தேடுதலை நடத்தினார்கள். அப்பொழுது 37 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இஙகிருந்து துப்பாக்கிகளும கைப்பற்றப்பட்டன.

அனுராதபுரத்தில் நிடோகம என்னுமிடத்தில் ஒரு தீவிரவாத சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (இ-455)

க. பொ. த. (உ.த)

# பரீட்சை விடைத்தாள்கள் பரிசீலகர் [illegible] விண்ணப்பம்

கொழுமபு, மார்ச் 26

வேண்டும.

## மக்களும் பதவியும்

### மொழி பெயர்ப்பாளர்

கல்முனை, மார்ச் 25



மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும கல்முனைக்குடியில் வசிப்பவருமான அல்ஹாஜ் மௌலவி எஸ் ஏ ஆர் எம செய்யிது கலீல் மௌலானா நீதி அமைச்சினால அரசாஙக அஙகீகாரம பெற்ற அரபு - தமிழ் மொழி பெயர்ப்பாளராக நியமனம பெற்று அமபாறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம செய்து கொண்டார்.

இவர் முன்னை நாள் ஜாமியா நளீமிய்யா அரபு விரிவுரையாளராகவும, கிண்ணியா புஹாரி அரபுக் கல்லூரி அதிபராகவும, கொழுமபு முகத்துவாரம ஜும்மஆ பள்ளிவாசல் கதீபாகவும இருந்து பல சேவைகளைச் செய்துள்ளார்.

தற்பொழுது இவர் கல்முனை சுன்னத் வல்ஜமாஅத் ஈராக் நட்புறவு ஒன்றியத்தின் தேசியத் தலைவராக இருப்பதுடன் முஸ்லிம சமூகத்திற்காகவும, சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை நிலைநாட்டுவதற்காகவும சன்மார்க்கப் பணியில் அருமபாடுபட்டு உழைத்து வருகின்றார். (ஐ-281)

### நம்பிக்கையாளர் சபை

கொழும்பு, மார்ச் 26

மாவனல்லை, கிரிஙகதெனிய மஸ்ஜிதுன்னூர் பள்ளிவாசலின் நமபிக்கையாளர் சபை—

பிரதம நிர்வாக டிரஸ்டி— அல்ஹாஜ் என் எல் எம லாபிர். நிர்வாக டிரஸ்டிகள்— அல்ஹாஜ் ஏ எல் எம ஹாஷீம (பரிஷ்டர்), ஜனாப்கள் எஸ் ஹஸன் ஜே பி. ஏ எம எம சுபைர் ஜே பி, எம எச் ஏ ஸலாம.

டிரஸ்டிகள்—

அல்ஹாஜ் எஸ் எச் எம ஸவாஹிர், அல்ஹாஜ் எம எஸ் எம ஏ பரகாத், அல்ஹாஜ் ஏ டபிள்யூ எம ஸலீம,

ஜனாப்கள் எம எஸ் எம ஸகரியா, ஏ ஆர் எம சுபைர் ஏ எம எம றவுப், எம எல் ஏ அஸீஸ், எம ஜே எம பாருக்,

வோர் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவு செய்து கொள்ள வேண்டும்—

மேற்படி விண்ணப்பங்களை மாநகர சபையில் பெறலாம்— அவ் விண்ணப்பங்களை 10 நாட்களுக்குள் பதிவு செய்வதற்காக மீள கையளிக்க வேண்டும்— இவர்கள் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்டிருக்க வேண்டும்—

தேவையில்லை— விண்ணப்ப படிவங்களை பெற்ற பதிவு செய்தால் பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படும்—

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தேசிய வீடமைப்புச் திணைக்களம், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு நிவாரணம் பெற்றவர்கள் இக்கடனுதவி பெறத் தகுதியற்றவர்கள் என அவர் தெரிவித்தார்— (இ—ங)

வவுனியா மார்ச் 25

நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்வாகங்கள் மாற்றப்பட்டதால், வன்னி, மன்னார் மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் பெரும் அவதியுறுகின்றனர்—

வன்னிப் பகுதியில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள கட்டுக்கரைக்குளம், அகத்தி முறிப்புக் குளம் ஆகிய பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனுராதபுர நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன—

இதனால் இப்பகுதி தமிழ் பேசும் விவசாயிகள் தங்கள் தேவைகளை பிரதிப் பணிப்பாளரின் கவனத்திற்குத் கொண்டுவர அனுராதபுரம் செல்ல வேண்டியுள்ளது—

அத்துடன் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதில் தமிழ் விவசாயிகளுக்கு மொழிச் சிக்கலையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது—

முன்னர் இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் வவுனியா பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது— (இ-10)

## பரிசீலனைக்கு விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 26

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையின் விடைப் பத்திரங்களை மீள் பரிசீலனை செய்ய விரும்புவோரிடம் இருந்து பரீட்சைத் திணைக்களம், விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது.

ஒரு பாடத்தின் விடைப் பத்திரத்தை மீள் பரிசீலனை செய்வதற்கு 50 ரூபா கட்டணமாக செலுத்த வேண்டும். நான்கு பாடங்களின் விடைப் பத்திரங்களை மீள் பரிசீலனை செய்வதாயின் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும.

கட்டணத் தொகையும தனித்தனியே அனுப்பி வைக்க வேண்டும.

இதனை பரீட்சை ஆணையாளர் திரு ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 6ஆம திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டும என்றும திரு ஆதர் வெதமுல்ல மேலும தெரிவித்தார். (இ—வ)

ஜனாப்கள் எம எஸ் எம ஸகரியா, ஏ ஆர் எம சுபைர், ஏ எம எம றவுப், எம எல் ஏ அஸீஸ், எம ஜே எம பாரூக், இஸட் ஏ எம அமீர், ஏ ஆர் எம அஷ்ரப், எம ஐ எம முபாரக், ஏ ஆர் ஏ ஸத்தார், அல் ஹாஜ் ஏ ஸி எம றாஸீக் ஜனாப்கள் எம எல் ஏ ஹமீட், எம ஜே எம தாலிப், எம எச் எம ஜிப்ரி, எம எச் எம பரீட், எஸ் எம எம ஹுஸைன், எஸ் எச் எம யாஸீன். ஏ டபிள்யூ எம நிலர் (எ)

## வை. எம். எம். ஏ. நிர்வாகிகள்

மடவளை, மார்ச் 25

மடவளை பஸார் வை எம எம ஏயின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்— யூ எஹ்யான், உப தலைவர்கள்— எச் எம மஹ்ரூப், பீ ஏ ஹாஸிர், ஏ டபிள்யூ எம மிஹ்லார், கே எம வசீர் அல் ஹாபிஸ், எம உபைதுர் றஹ்மான்,

செயலாளர்— எச் ஏ சக்கூர், உதவிச் செயலாளர்— எம என் நுஸ்ரி, பொருளாளர்— எம ஆர். மலிக்,

கணக்குப் பரிசோதகர் எம நஜிமுதீன்,

இவர்களுடன் மேலும 4 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ—431)

# முஸ்லிம்களுக்கு தனியான மாகாணசபை தேவை

## அஸீஸ் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 26

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம மக்களுக்கு என தனியான ஒரு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும.

வடக்கு — கிழக்கு சமாதானக் குழுவின் தலைவரான சாகுல் ஹமீதிடம இலங்கை முஸ்லிம கவுன்சில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் ஹமீதுக்கு இலங்கை முஸ்லிம கவுன்சிலின் செயலாளர் நாயகம ஜனாப் அஸிஸ் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அதில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

முஸ்லிம மக்களின் இந்த நியாயபூர்வமான கோரிக்கைக்குப் புறமபாக வடக்கு — கிழக்கு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட முடியாது.

முஸ்லிம மாகாணம ஒன்று உருவாக்கப்படுமாயின் இலங்கை — இந்திய சமாதான உடன்படிக்கையின் கீழ் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டிய அவசியம எழாது.

கடந்த ஆண்டு டிசமபர் மாதம தங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம மக்களுக்கு என ஏன் ஒரு தனி மாகாணம தேவை என்பதற்கான காரணங்களை முன்வைத்தோம.

விடுதலைப் புலிகளுடனும ஏனைய தமிழ் குழுக்களுடனும நடத்தப்பட்டு வரும பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம மாகாணம பற்றி பிரஸ்தாபிப்பதாக அப்போது எமமிடம உறுதி அளித்திருந்தீர்கள்.

தமிழரசு கட்சி சமஷ்டி ஆட்சி அரசமைப்புக்கான தமது கொள்கைத் திட்டத்தில் கிழக்கு மாகாண முஸ்லிமகளுக்கென ஒரு மாகாணம பற்றி குறிப்பிட்டிருந்தது—

சென்னையில் விடுதலைப் புலிகளுக்கும முஸ்லிம ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கும இடையே கைச்சாத்திடப்பட்ட ஆவணத்தின் 14 சி பிரிவின் கீழ் இதே மாதிரியான ஒர ஷரத்து காணப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலின் போது ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பாக வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம மக்களுக்கு என தனியான மாகாண சபை பற்றி தீர்க்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈ பி ஆர் எல் எப் சமர்ப்பித்துள்ள 19 அமச கோரிக்கையிலும முஸ்லிம மக்களுக்கு என தனிப்பிரிவு தேவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே எமது தனி மாகாணக் கோரிக்கை ஒன்றும புதியதல்ல.

இப்படி இலங்கை முஸ்லிம கவுன்சில் தனது கடிதத்தில் கூறியுள்ளது (இ—032)

# வடக்கு ரயில் பாதைகளில் 8 லட்சம் சிலீப்பர் கட்டைகள் பழுது

## இறக்குமதி செய்து பொருத்த பணம் இல்லையாம்

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் ரயில் பாதைகளில் போடப்பட்டுள்ள சிலீப்பர் கட்டைகளில் மூன்றில் ஒரு பகுதி பாவனைக்கு உதவாத அளவிற்கு இற்றுப் போயுள்ளன. வடக்கே செல்லும மூன்று ரயில் பாதைகளே இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு 8 லட்சம சிலீப்பர் கட்டைகள் உடனே தேவை. இறக்குமதி செய்து பொருத்த பணம இல்லையாம.

ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நாட்டில் 8 இடங்களுக்கு ரயில் பாதைகள் போடப்பட்டுள்ளன.

இவற்றில் பொருத்தப்பட்டுள்ள சிலீப்பர் கட்டைகளில் சுமார் 8 லட்சம சிலீப்பர் கட்டைகள் பாவனைக்கு உதவாத அளவிற்கு இற்றுப் போய் சேதமடைந்து இருக்கின்றன.

காங்கேசன்துறை, தலைமன்னார் மற்றும புத்தளம ஆகிய இடங்களுக்கான ரயில் பாதைகளில் உள்ள சிலீப்பர் கட்டைகளே கூடுதலாக சேதமடைந்துள்ளன.

வட பகுதியில் பல வருடங்களாக வன்செயல்கள் இடம பெற்று வந்தமை தெரிந்ததே.

இதன் காரணமாக இந்த மூன்று ரயில் பாதைகளும முறையாக பராமரிக்கப்படாமையும இதற்கு ஒரு காரணமாகும என மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

ரயில் பாதைகளின் இந்த நிலைமை காரணமாக நேர அட்டவணைப்படி ரயில்களை செலுத்துவதில் பல தடைகள் ஏற்பட்டுள்ளன.

சில இடங்களில் ரயில்களின் வேகம கட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. எங்காவது சில இடங்களில் எப்போதும பழுது பார்க்கும பணி மேற்கொள்ளப்பட்டே வருகிறது.

சிலீப்பர் கட்டைகள் மோசமாக இருக்கும சில இடங்களில் தண்டவாளங்களே முறிந்து விடுகின்றன.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாக வெளிநாடுகளில் இருந்து சிலீப்பர் கட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும. அதற்கு திணைக்களத்திடம பணம இல்லை.

இலங்கையில் கொங்கிறீட் சிலீப்பர் கட்டை உற்பத்தி இப்போது ஆரமபிக்கப்பட்டுள்ளது.

எனவே திணைக்களம பெரும பிரச்சினையை எதிர்நோக்கி இருக்கிறது.

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார். (உ—ற)

தெற்காசிய நாடுகளுக்கான

# 5 ஆவது விளை. போட்டி

# கொழும்பில் நடைபெறும்

## சின்னம் தெரிவு செய்ய குழு நியமனம்

கொழும்பு மார்ச் 26

எதிர்வரும் ஆண்டின் இறுதிப் பகுதியில் தெற்காசிய நாடுகளுக்கான ஐந்தாவது விளையாட்டுப் போட்டி கொழும்பில் கோலாகலமாக நடத்தப்படவிருக்கிறது.

இதன் பொருட்டு கொழும்பு விளையாட்டுப் போட்டியின் நோக்கம் கொழும்புப் போட்டிக்கான சின்னம், இப்போட்டிக்கான பறவை - மிருகம் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் உருவம் ஆகியவற்றைத் தெரிவு செய்ய அமைப்பாளர் கமிட்டி முடிவு செய்துள்ளது.

இம்மூன்றையும் தெரிவு செய்யும் பொருட்டு தேசிய மட்டத்தில் போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. போட்டிகளில் சிறந்ததாகத் தெரிவாகும் வாசகம், இலட்சினை மற்றும் உருவம் ஐந்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான உத்தியோகபூர்வமான வாசகமாகவும் இலட்சினையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு அவற்றை உருவாக்கியவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்பவர்கள் கவனிக்க வேண்டிய விதிமுறைகள் வருமாறு—

வாசகம்- ஆறு சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்- ஒருவர் இரு வாசகங்களை மட்டுமே போட்டிக்கு அனுப்பி வைக்கலாம்.

இலட்சினைக்கான விதிகள்- பொன் நிறமும் வெள்ளி நிறமும் உபயோகிக்கப்படக் கூடாது- கறுப்பு வர்ணமும் மேலும் இரு வர்ணங்களும் உபயோகிக்கப்படலாம்.

உபயோகிக்கப்படும் வர்ணங்கள் ஆப்-செட் அச்சுக்கு உகந்ததாகவும் வடிவமைப்பு கறுப்பு - வெள்ளை அச்சுக்கு பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.

அளவு 35X42 மில்லி மீட்டராக இருத்தல் வேண்டும்.

வெண் ஆர்ட் போர்டில் கறுப்பு வர்ணத்தை உபயோகித்து உருவ வடிவமைப்பு வரையப்பட வேண்டும்- வர்ண சேர்க்கை தொடர்பான விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

இந்த உருவ அமைப்புடன் 5ஆவது தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டி கொழும்பு 1991 என்ற வாசகங்கள் இணைக்கப்பட வேண்டும்.

உருவ அமைப்புக்கான விதிகள்—

ஏற்கனவே நடைபெற்ற தெற்காசிய போட்டிகளுக்கான போட்டி உருவங்கள் வரைந்து அனுப்பப்படக் கூடாது.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் தமது படைப்புகளை எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் பணிப்பாளர் நாயகம், தெற்காசிய போட்டிக்கான அமைப்பாளர் கமிட்டி, விளையாட்டுத் துறைக்கான ராஜாங்க அமைச்சு அலுவலகம், 33 டொரிங்டன் பிளேஸ், கொழும்பு-7 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். (த—032)




## விளையாட்டு வீரர்கள்

# நாட்டுக்கு புகழ் தேடித் தர வேண்டும்

### அமைச்சர் நந்தா மத்தியூ உரை

கொழும்பு மார்ச் 26

விளையாட்டு வீரர்கள் தமது ஆற்றல்களை வெளிக்காட்டி நாட்டுக்குக் கீர்த்தி தேடித் தர வேண்டும்.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு நந்தா மத்தியூ இவ்வாறு கூறினார்.

பேருவளை நகர எழுச்சி கிராம எழுச்சி விளையாட்டு வார இறுதி நாள் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பேருவளை மொரகல்ல கரபந்தாட்ட விளையாட்டு அரங்கில் இந்த வைபவம் நடைபெற்றது.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமை வகித்தார்.

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:

பேருவளை நகர உதாவ கம உதாவத் திட்டம் முழு நாட்டிற்கும் ஓர் முன்மாதிரியாகும்.

இத்திட்டத்தினால் கிராமப் புறங்கள் மட்டுமன்றி பேருவளை நகரமும் புதுப்பொலிவு பெற்று வருகிறது.

பேருவளை மக்கள் பாக்கியசாலிகள் என்றே சொல்ல வேண்டும்.

விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதற்காக இன்றைய அரசாங்கம் பெருந் தொகையை செலவு செய்து வருகிறது.

இலங்கை விளையாட்டுத் துறையில் இன்று முன்னேறியுள்ளது.

விளையாட்டு வீரர்கள் தமது ஆற்றல்களை சாதனைகளை காட்டி எமக்கு கீர்த்தியைத் தேடித் தர வேண்டும்.

மேல் மாகாண சபை உணவு கூட்டுறவு கைத்தொழில் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம் பாயிஸ் உட்பட மற்றும் பலரும் பேசினர். (து—007)

## மாத்தறை மாவட்டத்தில்

# புத்தாண்டை முன்னிட்டு பல விளையாட்டு போட்டிகள்

மாத்தறை மார்ச் 25


எதிர்வரும் புத்தாண்டை மாத்தறை மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் மிகவும் கோலாகலமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திரு எஸ் கே சந்திரசோம தலைமையில் நடைபெற்ற புத்தாண்டு ஏற்பாடுகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்ட உதவி அரசாங்க அதிபர்கள் இதனை தெரிவித்தனர்.

மாத்தறை லயன்ஸ் கழகம் மாட்டு வண்டிப் போட்டி சைக்கிளோட்டப் போட்டி படகுப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி என்பவற்றை ஏப்ரல் 15ந் திகதி நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளதாக மாத்தறை லயன்ஸ் கழக தலைவர் திரு சந்திர குமார் விஜயகுணவர்தன தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் புத்தாண்டு அழகு ராணிப் போட்டி சறுக்கு மரம் ஏறும் போட்டி ஓலை பின்னுதல், தேங்காய் துருவுதல் கரபந்தாட்டம் உதைபந்தாட்டம், முட்டி உடைத்தல் போன்ற போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர்கள் தெரிவித்தனர்.

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (த—130)



## உபகரணங்கள் கையளிப்பு

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் எம் எஸ் செல்லச்சாமி பல விளையாட்டுக் கழகங்களுக்கு உதவி வருகிறார்- 17-3-90 அன்று கொழும்பு மேற்கைச் சேர்ந்த யங் சில்வர் விளையாட்டுக் கழகத்துக்கு உதைபந்தாட்டத்துக்கான விளையாட்டு வீரர்கள் அணியும் உடைகளையும், விளையாட்டு உபகரணங்களையும் அக்கழகத்தின் தலைவர் எம் எம் நஸீரிடம் அமைச்சர் வழங்கினார்.

நஸீர் ராஜாங்க அமைச்சரிடம் இருந்து விளையாட்டு உபகரணங்களை பெறுவதையும், அமைச்சரின் அருகில் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு எஸ் திருச்செல்வரன் இணைப்பு அதிகாரி திரு பென்ராசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (த)

## விமானப் படை அணி வெற்றி

மடவளை மார்ச் 25

பிரிஸ்டல் லீக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விமானப் படைக் கோஷ்டி வெற்றி பெற்றது.

17-3-90 அன்று பொரளையில் நடைபெற்ற மேற்படி உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை விமானப் படை உதை பந்தாட்ட அணி குண்டி ரெட்டயமன்ட் அணியை 4—0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. (த—131)




மார்ச் 27 (செவ்வாய்க்கிழமை)

மார்ச் 28 (புதன்கிழமை)

வந்து சேரும் நேரம்

யுடன் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி யொன்றும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது-

(த-430)

இணைப்பு அதிகாரி திரு பென்ராசன் ஆகியோர் நிற்பதை யும படத்தில் காணலாம-

(த)

அணி கண்டி ரெட்டயமண்டி அணியை 4—0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி யது-

(த-431)

## மார்ச் 27 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேருமநேரம

| | | |
|---|---|---|
| 0650 | முஸ்கட் | யூ எல் 210 |
| 0700 | அபுதாபி | ஜீ எப் 4144 |
| 0800 | டுபாய் | ஈ கே 800 |
| 0950 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ சி 586 |
| 1315 | சொபியா, அபுதாபி பாஙகொக் | எல் இசட் 595 |
| 1330 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1600 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1755 | பமபாய், சென்னை | ஐ சி 586 |
| 2050 | கராச்சி, மாலைதீவு | பி கே 774 |
| 2215 | குவைத் | யூ எல் 228 |
| 2235 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |
| 2245 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | பாஙகொக் | எல் இசட் 596 |

### புறப்படுமநேரம

| | | |
|---|---|---|
| 0700 | திருச்சி | யூ எல் 131 |
| 0815 | அபுதாபி | ஜீ எப் 4145 |
| 0915 | டுபாய் | ஈ கே 801 |
| 1015 | குவைத் | யூ எல் 227 |
| 1045 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1206 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1235 | சென்னை, பமபாய் | ஐ சி 574 |
| 1415 | சோபியா, அபுதாபி, பாஙகொக் | எல் இசட் 595 |
| 1730 | றியாத் | யூ எல் 271 |
| 1840 | பமபாய், சென்னை, | ஐ சி 574 |
| 1915 | சென்னை | யூ எல் 121 |
| 2150 | கராச்சி, மாலைதீவு, | பி கே 775 |
| 2350 | சிஙகப்பூர் | எஸ் கியூ 401 |

## மார்ச் 28 (புதன்கிழமை)

### வந்து சேருமநேரம

| | | |
|---|---|---|
| 0530 | குவைத் | கே யூ 361 |
| 0530 | றியாத் | யூ எல் 272 |
| 0630 | லண்டன் டுபாய் | யூ எல் 504 |
| 0745 | ஜித்தா தஹ்ரான் றியாத் | எஸ் வீ 346 |
| 0800 | சிப்போல் தஹ்ரான் குவைத் | கே எல் 801 |
| 0825 | டுபாய் மாலைதீவு | ஈ கே 802 |
| 1130 | சென்னை | யூ எல் 122 |
| 1225 | பாஙகொக் | ரி ஜி 307 |
| 1310 | மாலைதீவு டுபாய் | ஈ கே 803 |
| 1545 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1945 | மாலைதீவு | யூ எல் 102 |
| 2000 | கோலாலமபூர் சிஙகப்பூர் | யூ எல் 313 |

### புறப்படுமநேரம

| | | |
|---|---|---|
| 0030 | அபுதாபி சோபியா | எல் இசட் 596 |
| 0115 | அபுதாபி சிப்போல் பாரிஸ் | யூ எல் 663 |
| 0230 | டுபாய் சூரிச் பிராஙபோர்ட் | யூ எல் 547 |
| 0720 | குவைத் | கே யூ 362 |
| 0800 | சென்னை | யூ எல் 121 |
| 0915 | ஜித்தா தஹ்ரேன் றியாத் | எஸ் வீ 347 |
| 0925 | டுபாய் மாலைதீவு | ஈ கே 802 |
| 0930 | கோலாலமபூர் சிஙகப்பூர் | யூ எல் 312 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1325 | பாஙகொக் | ரி ஜி 308 |
| 1410 | மாலைதீவு டுபாய் | ஈ கே 803 |
| 1545 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1755 | பமபாய் கராச்சி | யூ எல் 181 |
| 1940 | கராச்சி தஹ்ரான் சிப்போல் | கே எல் 802 |
| 2115 | நெரிடா புக்கியோக்கா | யூ எல் 686 |
| 2330 | டுபாய் லண்டன் | யூ எல் 603 |

குறிப்பு— யூ எல் — எயார் லஙகா, ஐ சி — இந்தியன் எயர லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் ரஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் ரஸ் கியூ — சிஙகப்பூர் எயார் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயார்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் ரி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி ஏ — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —ரோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 52218 (விமான நிலையம)

(கு)

## வானொலி

### 27—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - காமாக்ஷி அமமன் சுப்ரபாதம
5-30 பாமாலை - முருகன் பிள்ளைத்தமிழ்
5-45 சைவ நற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை, ஜனாப் ஐ எல் நிஸாம ஷெரீப்
5-55 பக்திப் பாடல்கள்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-30 பாடசாலை கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 நாதவினோதம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பாட்டு — கே இராம நாதன்
11-00 வீணைக்கச்சேரி — சிட்டிபாபு
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்பகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்பகள்
6-15 சைவநெறி
6-30 பொலீஸாருமை நாடகம
6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி — மலர்வேந்தன்
7-00 இளைஞர் மன்றம — நடத்துபவர்: த தேவதாஸ்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்
8-05 கொழுமபு ஸாஹிராக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலஙகை முஸ்லிம கல்வி மாநாட்டு வெள்ளி விழா அஙகுரார்ப்பண நிகழ்ச்சிகளின் தொகுப் புரை — தொகுத்தளிப்ப வர்: அஹ்மத் முனவ்வர்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 நாடகம — ஆழ்கடல் எழுதியவர்: எஸ் ஏ சீ எம பிர்தௌஸ்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலையகத்தில் கலைஞர் திருமதி லக்ஷ்மி நடராஜன் தொகுப்பு: சற்சொரூபவதி
10-00 தாளவாத்தியச் கச்சேரி — கே சண்முகமபிள்ளை
10-30 மெல்லிசைப் பாடல்கள்
10-45 பஜன் — லக்ஷ்மி சஙகர்
11-00 ஒலிபரப்பு முடிவு

### 28—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை ஒப்பிலியப்பன் சுப்ரபாதம
5-30 பாமாலை ஆழ்வார் பாடல்கள்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை,
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண் ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்தியம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 கிளாரினட் - ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்
11-00 புல்லாஙகுழல்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேடமுஸ்லிம நிகழ்ச்சி
6-30 அருளமுதம
6-45 மெல்லிசைப் பாடல்கள்
7-00 முஸ்லிம நிகழ்ச்சிகள் — இஸ்லாமிய கீதம

இரவு —

7-15 சமூகச் சித்திரம — "ஊடுருவல்" பிரதி திக்குவெல்லை ஸஃப்ரி
7-25 தஜ்வீத் வகுப்பு நடத்துபவர் மௌலவி எஸ் எம ஆரிப்
7-41 இஷாத் தொழுகைக் கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்
8-00 களத்துமேடு சஞ்சிகை நிகழ்ச்சி
8-15 கதமபம - குறு நாடகஙகள்
8-45 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலைப்பூஙகா தொகுப்பு
10-00 இசைக் கச்சேரி — புல்லாஙகுழல்
10-45 பஜன் - பிரமிளா
11-00 ஒலிபரப்பு முடிவு

## டெலிவிஷன்

### 27—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி - தமிழ்
5-00 செய்திகள் - சிஙகளம
5-30 "டிபென்டர்ஸ் ஆப் தி ஹேர்த்
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-30 செய்திகள் - தமிழ்
6-55 "கலை அரஙகம"
7-25 "சில்தி சந்தல்ல"
8-00 செய்திகள் - சிஙகளம
8-30 "ஓ ஷின்"
9-00 சம்பத் ரேக்கா
9-30 செய்திகள் - ஆஙகிலம
10-00 "டினஸ்டி"
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-15 "ஹீரோஸ் ஆப் சமர்"
6-30 செய்திகள் - ஆஙகிலம
7-00 "கி சலமபா"
7-30 பான்கிளப்
8-00 "நியு ஒட் குப்பிள்"
8-30 இன் சேர்ச் ஆப் த பாஸ்ட்"
9-00 நிக்காடோ கேள்விப் போட்டி
9-30 "ரொக்போட் பைல்ஸ்"
10-00 செய்திகள் - ஆஙகிலம
10-26 ரொக்போட் தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

## வை. எம். எம். ஏ. நன்றி

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் உள்ள இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவை மூடுவதற்குத் தீர்மானித்த ஜனாதிபதிக்கு அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் மத்திய கிழக்கில் சமாதானத்தை உறுதிப்படுத்தவும் இந்த் தீர்மானம் துணை செய்யுமென்றும் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

(ல—007)

## இந்தியப் படையினர் வெளியேறியதை முன்னிட்டு நாடெங்கும் விசேட பூஜைகள்

கொழும்பு, மார்ச் 26

இந்தியப் படையினர் நாட்டை விட்டு எவ்வித பிரச்சினையும் இன்றி வெளியேறியதற்கும் இலங்கை இந்திய தலைவர்களுக்கு நீண்ட ஆயுளை வேண்டியும் நேற்று முன்தினம் நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விகாரைகள் கோயில்கள் பள்ளிவாசல்கள் தேவாலயங்கள் ஆகியவற்றில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் குப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாச நாதர் கோயில் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில் ஆகியவற்றில் விசேட பூஜைகள் நடந்தன.

பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தில் நடந்த விசேட வழிபாட்டு வைபவத்தில் கல்வி கலாசார அமைச்சர் திரு. லொக்கு பண்டார உட்பட இந்து கலாசார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(ல—மு)

# விசர் நாய்க் கடிக்கு கடந்த ஆண்டு 125 பேர் பலி

கொழும்பு, மார்ச் 26

விசர் நாய்க்கடி நோயினால் கடந்த ஆண்டு 125 பேர் மரணமானார்கள்.

இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டிலேயே வெகுவாக அதிகரித்தது.

விசர் நாய்க்கடி நோயை ஒழிப்பதற்காக சுகாதார அமைச்சு விரிவான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கிறது.

மாகாண சபைகளின் சுகாதார அமைச்சர்கள், சுகாதாரப் பணிப்பாளர்கள் செயலாளர்கள் டாக்டர்கள் ஆகியோர் இது தொடர்பாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டு 29 பேர் விசர் நாய்க்கடி நோயினால் பாதிக்கப்பட்டனர்.

(ல—ண—007)

## 1975 முதல் 1000 தாய் வாசிகள் சவூதியில் மரணம்?

றியாத், மார்ச் 26

சவூதி அரேபியாவில் 1975ஆம் ஆண்டு முதல் சுமார் 1000 தாய்லாந்துத் தொழிலாளர்கள் மர்மமான சூழ்நிலையில் மரணமாகியிருக்கிறார்கள்.

இப்படி ஜேர்மன் செய்தி ஸ்தாபனம் ஒன்றினால் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்தியை சவூதி அரேபிய உள்துறை அமைச்சு கடந்த சனிக்கிழமை மறுத்தது.

இந்தச் செய்தி முற்று முழுதாக உண்மைக்குப் புறம்பானது என்று சவூதி அரேபியா தெரிவித்திருக்கிறது.

தாய்லாந்துவாசிகள் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களாக வேலை பார்க்கும் நாடுகளுக்கு (சவூதியும் உட்பட) சுகாதார அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தாய்லாந்து சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகள் தெரிவித்தார்கள் என்று ஏஜென்சி செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

[ண]

## புத்தாண்டை விமரிசையாக கொண்டாட திருமலை மக்கள் ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 26

திருகோணமலை வாசிகள் இந்த முறை தமிழ், சிங்கள புத்தாண்டை வெகு விமரிசையாக கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை இந்தியப் படையினர் முற்றாக நாட்டில் இருந்து வெளியேறியதோடு இந்த ஏற்பாடுகள் ஆரம்பமாகின.

அங்கு தமிழ் மக்களும், சிங்கள மக்களும் புத்தாண்டை முன்னிட்டு பொருட்களை வாங்குவதற்காக வீதிகளில் தழுமியிருந்தனர் என்று திருகோணமலை அரசாங்க அதிபர் திரு ஏ கே விஜேகோன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சிங்களவர்கள் அதிகமாக வாழும் திருகோணமலை வீதியில் தற்போது தமிழர்கள் காணப்படுகிறார்கள்.

அதேபோல், திருகோணமலை நகரப் பகுதியில் சிங்களவர்களும் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். 4 ஆண்டுகளுக்குப் பின்னரே இவ்வாறான சுமுக நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இப்படி திரு விஜேகோன் தெரிவித்தார்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் வீதிகளில் ரோந்து சென்றபோதிலும், மக்களின் நடமாட்டத்திற்கு அதனால் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சிகளில் முதலாவது நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை கிண்ணியாவில் நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நேற்றுமுன்தினம் திருகோணமலை நகரில் மற்றுமொரு விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சி நடைபெற்றது. சகல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் அதில் கலந்து கொண்டனர் என்று திரு விஜேகோன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலைப் பகுதியில் விவசாயிகள் அடுத்த சிறுபோக பயிர்ச் செய்கைக்குத் தயாராகி வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

அங்கு நடந்த பெரும்போக பயிர்ச்செய்கை திருப்திகரமாக இருந்ததாகவும் தெரியவந்தது.

(ல—ற)



மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இலங்கையிலுள்ள பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதி ஜனாப் ஒமர் அபூரஷீத் உரையாற்றுவதைப் படத்திற் காண்க.

இடமிருந்து வலமாக திரு மஹிந்த ராஜபக்ஷ எம பி, சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது திரு அதாவுத செனவிரத்ன எம பீ, திரு பந்துல குணவர்த்தன எம பீ ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர்.

(ல—007)

## வடக்கு — கிழக்கு மாகாண ஆசிரியர் பட்டதாரி சம்பளம் வழங்க ஆவன செய்யும்படி வேண்டுகோள்

கல்முனை, மார்ச் 26

1988 ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்று தற்போது சேவையிலுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பட்டதாரி சம்பளத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.


வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் எம எம மன்சூரை ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கம் இவ்வாறு கடித மூலமாகக் கேட்டிருக்கிறது.


பிரஸ்தாப பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜனாப் ஏ எல் எம முக்தாரால் அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது—

சேவையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு மாகாண கல்வி அமைச்சினால் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்படுகின்றது. அதே வேளை 1988ஆம ஆண்டு ஜனவரி 1ஆம திகதிக்குப் பின்னர் பட்டம் பெற்ற அ... இம்மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சாதாரண ஆசிரியர்களாகவே உள்ளனர்.

இது கவலைக்குரியதாகவும் வேதனையைத் தரக் கூடியதாகவும் இருக்கிறது.

வேலையற்றிருப்போருக்கு நியமனம் வழங்குவதை எமது சங்கம் பாராட்டுகிறது. ஆனால் இவ்வாறான ஆசிரியர்களுக்கு





திருகோணமலையில் இருந்த கடைசிப் பகுதி இந்தியப் படையினர் கடந்த சனியன்று தாயகம் திரும்பினார்கள்- இவர்கள் தாயகம் புறப்படும் முன்னர் திருகோணமலை துறைமுகத்தில் அணி வகுத்து நின்ற போது பிடிக்கப் பட்ட படம் இது- (ல)

# சோனகர் சங்கம்

## ஜனாதிபதிக்கு பாராட்டு

கொழும்பு, மார்ச் 26

இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவை மூடுவதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவை அகில இலங்கை சோனகர் சங்கம் பாராட்டியுள்ளது-

இந்தத் தீர்மானத்தை எடுத்த ஜனாதிபதி உலகின் தலைசிறந்த ராஜதந்திரியாக மதிக்கப்படுவார்-

எந்தவொரு வாக்குறுதி அளித்தாலும் அதனை நிறைவேற்றித் திருவேன் என்ற தன்மை ஜனாதிபதியிடம் உண்டு- இதனையே இத் தீர்மானமும் உணர்த்திவிட்டது-

சமாதானம், வறுமை ஒழிப்பு, சகலருக்கும் நீதி போன்றவற்றுக்காக ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளில் அல்லாஹ் அவருக்கு வழி காட்ட வேண்டும்

இவ்வாறு பிரார்த்திப்பதாகச் இச் சங்கம் தெரிவித்துள்ளது

(ல-007)

# அரச தாதிமார்களுக்கு புதிய சம்பளத் திட்டம்

கொழும்பு, மார்ச் 26

அரச ஆஸ்பத்திரிகளின் தாதிமார்களுக்கு ஒன்றிணைக்கப்பட்ட தாதிமார் சேவை முறையிலான ஒரு புதிய சம்பளத் திட்டம் தயாரிக்கப்படும்.

சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான குழுவிடம் இதற்கான சிபார்சுகள் சமர்ப்பிக்கப்படும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்துக்கும், அரச சேவைகள் ஐக்கிய தாதிமார் சங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தாதிமார் சபை சட்டத்தைத் திருத்தல், மேலதிக நேர வேலை கட்டுப்பாட்டை அகற்றுதல் தாதிமாருக்கு குடியிருப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பான பல கோரிக்கைகளுக்கும் அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

(ண-007)

# ஒரு பெண்ணின் நகைகளை சூறையாடிய நாக இராணுவ வீரர் கைது

கொழும்பு, மார்ச் 26

பெண் ஒருவரின் தங்க ஆபரணங்களை இராணுவ வீரர் ஒருவர் கொள்ளையடித்தாராம்- இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார்

கொழும்பு காலிமுகத் திடலுக்கு அருகில் இச் சம்பவம் சனியன்று நடைபெற்றது-

கொள்ளையில் சம்பந்தப் பட்ட மற்றொருவர் தப்பி ஓடிவிட்டார்-

இவர்கள் இருவரும் சிவில் உடையில் இருந்த இராணுவத்தினர் என்று கோட்டை பொலீஸார் தெரிவித்தனர்-

இரவு ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரே சந்தேக நபரைக் கைது செய்தனர்

இக் கொள்ளை தொடர்பாக கோட்டை பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்-

(ல-007)

சங்கம் பாராட்டுகிறது. ஆனால் இவ்வாறான ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கி இருப்பின் அது நியாயமாக இருந்திருக்கும்.

எனவே, தாமதம் செய்யாது மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் பட்டம் பெற்ற சகல ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(எ-281)

# உள்ளூராட்சி சபை

## தேர்தல்கள் விரைவில்

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன- இதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது-

மாநகர சபைகள் நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களை நடத்த வகை செய்யும் சட்ட விதிகளை உள்ளடக்கிய உத்தேச சட்ட வரைவு ஏற்கனவே வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விட்டது-

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றம் மீண்டும் கூடும் போது இச்சட்டவரைவு சபையில் சமர்ப்பிக்கப்படும்-

இதே சமயம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் 18-30 வயதுக்குட்பட்ட இளைஞர்களை பிரதிநிதித்துவம் கொள்ள வழிவகுக்க வேண்டும் என்ற இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்திருந்த சிபார்சை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது-

இந்த யோசனை தொடர்பாக அரசாங்கம் ஏனைய அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி இந்த சிபாரிசுக்கு சட்ட அந்தஸ்து வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றும்-

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும்-

(ல-032)


தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

எம். டி. குணசேன அண்ட் கம். லிமிட்.

217 ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி 23981—84



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை- தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 27 மார்ச் 1990.

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P O Box 1613